ஞானோதயம்

தபஸ்வினி இர. கங்காதேவி

நினைவு ★ மலர்

தவத்திரு

ஞானயோகி இரத்தினசற்குரு

ஞானமிகு ஓம் பிரகாச் சற்குரு சரண நிழலில்!

"ஓம்" எனும் மெய்ப் பொருள் விளக்கப்படம்

" இது (பிரபஞ்சம்) அனைத்தும் "ஓ" எனும் எழுத்து. அதன் விரிவான பொருள்: இருந்தது - இருப்பது - (இனிமேல்) இருக்கப்போவது ஆகிய எல்லாம் ஓங்காரமே. மூன்று காலங்களுக்கும் அதீதமான யாதொரு பொருளும் ஓங்காரமே தான்." (மாண்டுக்ய உபநிடதம்)



"இப்படிப் போல நாம ரூபங்கள் ஏதுமின்றி
ஒப்பமாய் இரண்டு அற்று ஒன்றாய் உணர்வெளி நிறைவாய் நிற்கும்
அப்பிரமத்தில் தோன்றும் ஐம்பூத விகாரமெலாம்..." (கைவல்ய நவநீதம்).

ஆக்கியவர்: தவத்திரு. கு. பெருமாள், மறுமலர்ச்சி மணி, பொத்தனூர், [சேலம்.]

ஓவியர்: திரு. நா. லோ. அய்யன்துரை, வேலூர்-சேலம்.

ஞானோதயம்

★

தவத்திரு ஞானயோகி இரத்தின சற்குரு

33/158, வைசியாள் வீதி

கோயம்புத்தூர் — 1

13-1-1982ல் கோவையில் சின்மயமாம் சிவத்தினிடை
சித்தம் வைத்து தன்மயமாம் சிவசொரூபமாகி உடலை
விடுத்த தபஸ்வினி **இர. கங்காதேவி**
அவர்களின் **நினைவுமலர்**

பதிப்பாளர் :

C. N. அருணாசலம்

2. தடாகம் ரோடு
வேலாண்டிபாளையம்
கோயம்புத்தூர் — 641 025

ஞானோதயம்

தவத்திரு: ஞானயோகி இரத்தின சற்குரு

முதற்பதிப்பு :- 1982

பதிப்புரிமை :- ஓம் பிரகாச ஞானமன்றம்

விலை ரூ. 2-50

பதிப்பாளர் : கோவை C. N. அருணாசலம்

பொதுச்செயலாளர்

ஓம் பிரகாச ஞானமன்றம்

ஓம் பிரகாச ஞானமன்ற வெளியீடு எண்- 15

"கங்கை சூழ் நீலகிரி காந்த லசல பீடச்
சங்ககுரு சாமி சார்துளசி — லிங்கமாம்
சாது யோகீந்ர சத்வ ஓம் பிரகாசர்
பாதமே போற்றுதும் பணிந்து".

அச்சிட்டோர் :

ஆலவாய் பிரிண்டர்ஸ்
153 G, வடக்கு வெளிவீதி,
சிம்மக்கல், மதுரை - 625001.

தவத்திரு

ஓம் பிரகாச சுவாமி அவர்கள்

காந்தல் — நீலகிரி

தோற்றம்	பூர்ணம்
14-8-1872	14-12-1947



கங்கா தேவி—என் சிஷ்யை

(1) குரவனாய் எனைப் பாவித்தே கொடும் பவக்கடல்
கடந்தாள்
பரவிய பக்தியாலே பரநிலைதனை உணர்ந்தாள்
உரடுள பஞ்ச கோச உரைதனை ஒழித்தப் பாலாம்
பிரம்மமாம் தனை அறிந்து பேரின்பப் பேறடைந்தாள்.

—ஞானபிதா.

"நித்திய சிவம் தானாகி நிற்பது ஞான நிஷ்டை"

தவத்திரு.

ஞானயோகி இரத்தினசற்குரு

அலங்கியர்.

தோற்றம் 13-2-1915

பூர்ணம் 13-1-1982

சித்த மலமற்று சிவம் ஆன

தபஸ்வினி இர. கங்காதேவி அவர்கள்

கோவை - 1

காணிக்கை

கோவை கருப்பக் கவுண்டர் வீதி கஸ்பா முன்சீப்
மணியகாரர் கு. முனியப்பகவுண்டர் பேத்தியும் ;
சி. எம். சுப்பணிக்கவுண்டர் திருமகளும்;
அலங்கியம். மணியம் ம. கு. இரத்தினவேலு
(ஞானயோகி இரத்தின சற்குரு) அவர்களின் துணைவியரும்;
கோவை C. K. தங்கவேலு அவர்களின் சகோதரியும்
நீலகிரி - காந்தல் ஓம் அசலபீடசற்குருநாதர்
தவத்திரு. ஓம் பிரகாச சுவாமி அவர்களின்
சிஷ்யையும் ;
எங்கள் அனைவரின் ஞானத்தாயாருமாகிய,
தபஸ்வினி. இர. கங்காதேவி அவர்கள்
தனது 68 ஆம் வயதில் 13—1—1982ல் உடல் எனும்
வரம்பிலிருந்து விடுபட்டு மெய்ப்பொருள் மயம் அடைந்த
48ஆவது நாள் - மண்டல பூஜா - நினைவுமலராக
இந்த ஞானச்சுவடியை அன்பர்கள் முன்பு
சமர்ப்பிக்கின்றனம் ஓம்

கோவை—1
1—3—1982

என
ஓம் பிரகாச ஞானமன்ற
தவசீலர்கள்

நீத்தார் நினைவு

மாநிலம் :-

உலக முவப்ப வலனுயர் மக்கள்
ஆதியிற் றோன்றிய சோதிநன் னிலம்
குமரிக் கோட்டுட னமருந் தண்டமிழ்
நாடெனப் புலவர் தேடிக் கண்டனர்
ஊழிப் பெருக்கா லாழியி லமிழ்ந்து
கடல்கொள எஞ்சிய திடல்தீந் தமிழகம்;

மாவட்டம் :-

பொங்கு நீர்வளம் தங்கும் வாவியும்
தெங்கு நெற்பயிர் தீஞ்சுவைக் கன்னலு
மெங்குஞ் செழித்து எழில்பெற் றிலங்குங்
கொங்கு மண்டலக் கோயம்புத்தூர்

தோற்றம் :-

கோவையம் பதியில் கொற்றவர் குடியில்
மேவிய செல்வன் மேதகு கருப்பா
கவுண்டர் வீதியிற் கஸ்பா மணியம்

பேர்முனி யப்பப் பெருமான் செல்வன்
கப்பினி கவுண்டர் கருணைக் காலோன்
ஒப்பிலா ஞான உயர்குணக் குன்றோன்!
குணநலக் கோதை கோணி யம்மையை
மணந்தன னவர்கள் வாழ்க்கை யதனில்
அன்போ டிரண்டாம் அருமை மகளாய்
இன்பமா யுதித்த எழில்நல நங்கை
பொங்குமா ஞானமும் போற்றிடு பண்புடைக்
கங்கைபோற் புனித கங்கா தேவி

இல்வாழ்க்கை :-

சீர்வளர் அலங்கிய நகரின் செல்வன்
ம.கு.இரத்தின வேலை மணாளனாம் - அன்னார் ;
இன்புறு வாழ்வில் எழில்மகட் பேறாய்
அன்புறு மனோன்மணி அருள்ஞான சேகரன்
நன்மணி மேகலை நவில்தேச நாயகி
தோன்றினர் நால்வர்; தூய்மைபெற் றிலங்க!
மாண்புறு மவர்க்கு மணமதை முடித்து
அறுபத் தெட்டில் அடைந்தார் பூர்ணம்

எல்லாப் புகழும் இரத்தினசற்குரு ஒருவருக்கே !

பதிப்புரை

இரத்தின சற்குரு தாள் பணிந்து!

அன்பார்ந்த அறிவுசால் பெரியோர்களே! பணிவான வணக்கம்!

'எல்லையற்ற பெருவெளியை' குறிக்கோளாகக் கொண்டு 'ஞானோதயம்' எனும் தலைப்பில் உருவாக்கப்பட்டு, உங்கள் கரங்களில் தவழும் இச் சிறு நூல்; சாதி-மத-இன வேறு-பாடு பாராமல், இப்புவியில் தோன்றிய அனைத்து மக்-களுக்கும், பொதுவான நூலாக விளங்கி ஞான வழி காட்டும் என உறுதியாக நம்பலாம்.

மண் - நீர் - நெருப்பு - காற்று - ஆகாயம் அல்லது வான் ஆகிய பஞ்சபூதங்களும் பஞ்சபூத பௌதீகங்களால் உண்டான பூமி-சூரியன் சந்திரன் முதலான கோள்களும், ஏனைய நட்சத்திர மண்டலங்களும், அதன் தொகுப்புக்-களான பெரும் அண்டங்களும், இதைப் போன்ற பல லட்சக் கணக்கான அண்டகோளங்களும் தோன்றி, நின்று, மறைவதற்கு இடமளித்துள்ள, 'பேராற்றலான இறைவனின் இயல்பை' ஒவ்வொரு மக்களும் உணர்ந்து, அதன் நிலையை அடைய, இந்நூல் ஒரு சிறந்த வழிகாட்டியாக இலங்கும்.

இந் நூலில் அடங்கியுள்ள ஞான அனுபவக் கருத்துக்-கள் அனைத்தும்; எங்கள் அனைவருக்கும் ஞானதீபமாக ஒளிவீசி ஞானவழி காட்டிவரும், எங்களது ஞான மன்ற சற்குருநாதர் தவத்திரு. ஞானயோகி இரத்தின சற்குரு அவர்களால் ஞான நிஷ்டையின் வாயிலாக உணரப் பட்டவையாகும்.

எங்களின் ஞானபிதா அவர்கள் சுமார் 12 ஆண்டு காலம் தவ வாழ்வில் இருந்த பொழுது. அவ்வப் பொழுது தனது அறிவில் உதயமான ஞான அனுபவக் கருத்துக்களை

தமது மாணவ மணிகளுக்குப் பயன்படட்டும் எனக் கருதி, சிறு சிறு கட்டுரைகளாக, எங்கள் ஒவ்வொருவருக்கும்; தானே, தனது கைப்பட மிக அழகாக எழுதி அனுப்பிக் கொண்டிருந்தார்.

இப்படியாக; 1976 முதல் 1978 வரையிலுள்ள காலக் கட்டங்களில் எழுதியனுப்பப் பட்ட பல கட்டுரைகளில், முக்கியமான மூன்று கட்டுரைகளைத் தொகுத்து, மக்கள் அனைவரும் பயனடைய வேண்டும் எனும் குறிக்கோளின் நிமித்தம் நூல்வடிவமாக அச்சாக்கி வெளியீடு செய்-துள்ளோம்.

புலனறிவுக்குப் புலப்படாத சிறு அணுவிலிருந்து பெரும் அண்ட கோளங்கள் வரை, ஊடுருவிப் பரந்து வியாபித்-திலங்கும், பேரறிவு சொரூபமான மெய்ப்பொருளின் இயல்பை உணர்ந்து, அதன் மயமடைய இந்நூல் பெரிதும் உதவி புரியும் என்பது எங்கள் நம்பிக்கை!

ஞான நிஷ்டை அனுபவங்கள் அடங்கிய இந்நூலில்; துணை இணைப்பாக சேர்த்துள்ள 'ஜடபரதோ பாக்யானம்' எனும் சடபரதரின் ஞான அறிவுரைகள், அறியாமை இருளில் மூழ்கியுள்ளவர்களுக்கு, கலங்கரை விளக்குப் போல வழி காட்டியாக உதவும் என்பது முழு நம்பிக்கை.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த இந்நூலினை; எங்களது ஞான பிதா அவர்களின் துணைவியரும், சிஷ்யையும் ஆகிய தபஸ்வினி, இர. கங்காதேவி அவர்கள் உடல் மறைவின் 48ஆவது நாள் (மண்டல பூஜா) நினைவுமலராக பதிப்-பித்த 'ஞானோதயம்' எனும் இந்த ஞானமலரை அம்மையாரின் திருவடிகளில் காணிக்கையாகச் செலுத்து-கிறோம்.

இந்நூலை உயர்ந்த முறையில் அழகு தவழ அச்சாக்கி நூல் வடிவமைத்த மதுரை ஆலவாய் அச்சகத்தாருக்கும்,

அச்சக செயல்வீரர்களுக்கும் எங்களது இதயம் கனிந்த நன்றி!

இறுதியாக; இந்நூலை வாசித்துணரும் ஒவ்வொரு அன்பர்களும், நூலினைப்படிப்பதோடு மட்டும் நின்று விடாமல், நூலில் கூறப்பட்டுள்ள ஞான அனுபவ உண்மைகளை தன்னளவில் மெய்மைப்படுத்தி உணர்ந்து 'பூர்ணத்துவ நிலை' அடைவீர்களாக. வெற்றி நமதே! குருவாழ்க!! குருவே துணை!!!

என,
தங்களன்புக்கினிய,
ஓம் பிரகாச ஞானமன்ற
அன்பர்கள் சார்பாக,

கோவை-25
1—3—1982

ஆத்மப்பிரகாஷ் சி. என். அருணாசலம்
செயலாளர்

★ சிதறிய முத்துக்கள் ★

யாராயிருந்தாலும் தேகாத்ம புத்தி உள்ளவரை உண்மையை உணர்ந்தவர் ஆகார்.

—ஸ்ரீ இரத்தின சற்குரு

கேட்கின்றது, அறிகின்றது, காண்கின்றது - இந்த மூன்று நிலைமைகளே உலகம் எனப்படும். இதில் மனம் காரணம்; மற்றெல்லாம் காரியமும் ஆகின்றன.

—ஸ்ரீ இரத்தின சற்குரு

என்று காண்போம் இனி?

(1) நந்தா விளக்கனைய நாயகியே நானிலத்தின்
சிந்தா மணியாய்த் திகழ்ந்தாயே - எந்தாய்
பருவுடலை நீ உருத்து பரப்பிரம்மம் ஆகினையே
திருவுடைய தெய்வ மாதே.

(2) பருவுடலை நீத்துப் பரம்பொருள் நீயான
அருமை மிகு மெய்ஞான அன்னையே — கருணையுடன்
அன்பு கலந்தின் அமுதை அருந்தவைத்த அருள் முகத்தை
என்று யாம் காண்போம் இனி.

—கொளிஞ்சிவாடி N. வெங்கட்டராமன்.

எங்குற்றாய் என் அன்னாய்!

முன்னை வினையறுத்தாய்—தமிழ்
முத்தாய் நிறைந்துவிட்டாய்

தன்னை அறிந்த முத்தாய்—ஞானந்
தந்தே யருளி வைத்தாய்

நுண்ணறிவுள்ள வராய் — ஞானம்
நுழைய அருள் புரிந்தாய்
பந்தங்கள் பாசமற்றாய்—இன்று
எங்குற்றாய் என் அன்னாய்!

பொருளடக்கம்

		பக்கம்
1.	எல்லையற்ற பெருவெளியிலேயே!	1
2.	வேதாந்த ஞானமிர்தம்!	9
3.	யோகமும் — ஞானமும்!	21
	துணை இணைப்பு :-	
	ஜடபரதோபாக்யானம்!	34

ஓம்

சிவோகம்

1. எல்லையற்ற பெருவெளியிலேயே !

“வானாதி பூதமாய் அகிலாண்ட கோடியாய்
மலையாகி வளை கடலுமாய்
மதியாகி இரவியாய் மற்றுள எலாம் ஆகி
வான் கருணை வெள்ளமாகி”
“பாராதி பூதமெல்லாம் பார்க்குங்கால் அப்பரத்தில்
சீராக நிற்கும் திறம் கண்டாய்”
— (தாயுமானவர்)

பிரபஞ்சம் :- பிரபஞ்சம் என்பது, பூமி - சூரியன்-சந்திரன் - செவ்வாய் - புதன் - குரு - சுக்கிரன் - சனி - யுரேனஸ் - நெப்டியூன் - ப்ளூட்டோ ஆகிய கிரகங்கள் விண்மீன்களான நட்சத்திரங்கள் ஆகிய, நாம - ரூப தோற்றங்களான பஞ்ச பூத விகாரங்களாகும்.

இப் பிரபஞ்சம் ; எல்லையற்ற பெரும் வெளியிலே - வெட்ட வெளியிலே - மிதந்து தோன்றிக் கொண்டும், பிற கோளங்களைச் சுற்றிக் கொண்டும், யாதொரு பிடிப்புமின்றி அந்தரத்தில் மிதந்து இயங்கிக் கொண்டிருக்கிறது.

சிலந்திப்பூச்சியின் உடலிலே நூல் தோன்றி, வலை பின்னி மறைவது போன்றே ; இந்த எல்லையற்ற பெரு வெளியின் நுண்ணிய அணுச்சை யோகத்திலே தான் எல்லாம் தோன்றி நின்று ஒடுங்குகின்றன.

இந்த நாம-ரூப-தோற்றமற்ற வெட்டவெளியே; பிரம்மம் - பரம் பொருள் - கடவுள் - சிவம் - இறைவன் எனப் பற்பல பெயர்-

களிட்டு அழைக்கப்படுகிறது. உண்மையில் அதற்குப் பெயரு-மில்லை; உருவமும் இல்லை; தோற்றமும் இல்லை.

இந்த நாம - ரூப தோற்றமான பிரபஞ்சம்; நாம - ரூப - தோற்ற மற்ற வெட்ட வெளியிலிருந்து தான், கற்பிதமாகத் தோன்றலாயின. இவைகள் தோன்றுததற்கு முன் இருந்-ததும் இந்த எல்லையற்ற பெரும் வெளியே தான்.

நிலநூல் வல்லுநர்களான விஞ்ஞானிகள் சூரிய மண்ட-லத்தை பற்றி அறிந்த உண்மைகளை மட்டும் பார்க்கலாம்.

சூரியன். ஒரு பெரிய நட்சத்திரம். அதை மையமாகக் கொண்டு சுற்றி வருபவைகள், முறையே; புதன் - வெள்ளி - பூமி - செவ்வாய் - குரு - சனி - யுரேனஸ் - நெப்டியூன் - புளுட்டோ எனும் கிரகங்களாகும். சூரியனிலிருந்து புதன் முதலியவற்றின் தூரம்.

புதன்	—	36	மில்லியன் மைல்களாகும்.
வெள்ளி	—	67	மில்லியன் மைல்கள்
பூமி	—	93	,,
செவ்வாய்	—	142	,,
குரு	—	434	,,
சனி	—	837	,,
யுரேனஸ்	—	1,790	,,
நெப்டியூன்	—	2,800	,,
ப்ளுட்டோ	—	3,680	,,

(ஒரு மில்லியன் என்பது 10 லட்சம் மைல்களாகும்.)

பூமிக்கு உபகிரகம், சந்திரன் ஒன்றே; செவ்வாய்க்கு உப கிரகங்கள் - 2; குருவுக்கு உபகிரகங்கள் - 13; சனிக்கு உப-கிரகங்கள் - 10; யுரேனசுக்கு உபகிரகங்கள் - 5; நெப்டி-யூனுக்கு உபகிரகங்கள் - 2. சூரியனைப் போல லட்சக்கணக்-கான சூரிய நட்சத்திரங்கள் ஆகாயப் பெருவெளியில்

உள்ளன. அவைகள் ஒவ்வொன்றுக்கும் பல கிரகங்கள் அடங்கிய மண்டலங்கள் இருக்க முடியும். இந்தத் தொகுதியை ஒரு அண்டம் என்று கொண்டால்; இப்படி இலட்சக்கணக்கான அண்டங்கள் கொண்டது பிரபஞ்சமாகும்.

மேலும்; பூமிக்கும் - சூரியனுக்குமிடையேயுள்ள தூரம், சுமார் 93 மில்லியன் மைல்களாகும். ஒரு விநாடிக்கு 1,86,000 மைல் வேகத்தில் சூரிய ஒளி பாய்ந்து செல்லுகிறது. அவ்வாறு சூரியனிடமிருந்து நமக்கு – உலகுக்கு ஒளி வந்து சேருவதற்கு சுமார் எட்டு நிமிடங்களாகிறது.

ஒளி, ஒரு விநாடிக்கு 1,86,000 மைல் வீதம் ஒரு ஆண்டு காலத்தில் எவ்வளவு தூரம் செல்லுமோ — அந்த தூரம் ஒரு ஒளி ஆண்டு ஆகும்.

1,86,000 × 60 × 60 × 24 × 365 = ஒரு ஒளி ஆண்டு

ஆன்ம நேய அன்பர்களே !

இப்படி; இலட்சக்கணக்கான ஒளி ஆண்டுகள் தூரத்தில் அமைந்துள்ள நட்சத்திரங்களையும் விஞ்ஞானிகள் ஆராய்ந்துள்ளார்கள். இன்னும் ஊன்றிப் பார்க்கும் பொழுது, மேலும் மேலும் தொலைவில் நட்சத்திரங்கள் உள்ளனவாம். எனவே, பிரபஞ்சத்தின் எல்லையை காணவே முடியாது போலும் ?

பூமியைப் போன்று கோடிக்கணக்கான மடங்கு பெரியது சூரியமண்டலம். அதைப் போலவே இலட்சக்கணக்கான மண்டலங்கள்; ஒரு அண்டத்தில் அமைந்துள்ளன. இவ்விதமான இலட்சக்கணக்கான அண்டங்கள், பிரபஞ்சத்தில் அமைந்துள்ளது என்றால்; பிரபஞ்சத்தில், பூமியின் அமைப்பு எவ்வளவு என்பதை நாம் நன்கு புரிந்து கொள்ள முடிகிறது.

இவ்வளவு பெரிய பிரபஞ்சத்தை உண்டாக்கி ஒரு ஒழுங்கு முறையில் ஓட விட்டு வேடிக்கை பார்க்கும் சக்தி கண்டிப்பாகப் பிரபஞ்ச வெளியை விட மிகப் பெரியதாக எல்லையற்ற பெருவெளியாக இருக்க வேண்டுமல்லவா ?

அதுவே பிரம்மம்! அதுவே பரமாத்மா! அதுதான் சிவம்! அதுவே இயற்கை! ஆன்ம நேயர்களே! விளையாட்டுப் பொருளான பிரபஞ்சம் மறையக்கூடும். மறையாமல் இருப்பது பிரம்மம் ஆகிய மெய்ப்பொருள். அந்தப்பெரிய சக்தியே மெய்ப் பொருள். தத் = அதுவே; சத் = மெய்யானது. அதுவே மெய் யானது!

மாபெரும் கடலில் வாழும் மீன் கடலைப்பற்றித் தெரிந்து கொள்ள முடியாது. அது கடலிலேயே பிறந்து வளர்ந்தது. கடலிலேயே அழிந்தும் விடுகின்றது. ஆகவே, மீன், கடல் நீரை விட்டு வெளியே வாழவும் முடியாது. கடலைப்பற்றித் தெரிந்துகொள்ளவும் முடியாது. அந்த மீன் இருப்பது கடல் நீரில்தான். எங்கு நீந்திச் சென்றாலும்; முன்னும் - பின்னும், மேலும் - கீழும் நீர்மயம் தான்.

இந்த மீனின் நிலையில்தான், மனிதர்களான நாம் இருக்-கிறோம். பிரபஞ்சத்தின் ஓர் மூலையில் வாழுகிறோம். நமது முன்னும் - பின்னும், மேலும் - கீழும், உள்ளும் – புறமும், சகல அண்டசராசரம் முழுதும் அந்த எல்லையற்ற பெரும் வெளியே-அகண்டாகாரமே – தான்.

அகண்டாகார பரம் பொருளான சிவமே எங்கும் நிறைந்-துள்ளது. அந்த (பிரம்ம = சிவ) வெளியான வெள்ளத்திலே பிரபஞ்சமே மூழ்கிக்கிடக்கிறது. அதை நாம் எப்படி அறிவது?

பிரம்மமும் - பிரபஞ்சமும், மனிதனாகிய நாமும் எந்த நிலையில் உள்ளோம் எனும் உண்மையை; நமது வேத உப நிடதங்கள் தெளிவாக அறிவுறுத்துகிறது.

''நிலம் – நீர் - நெருப்பு - வளி (காற்று) – வெளி எனும் ஒவ்-வொன்றும் தனித்தனி குணம் உள்ளது; இவையனைத்தும் பிரம்மம்''

''கண் - கண்ணுல் காணப்படும் பொருள்கள்; காது- காதால் கேட்கப்படுவன; மூக்கு - மூக்கால் முகரப்படுவன; நாக்கு - நாக்கால் சுவைக்கப்படுவன; உடம்பு - உடம்பால் உணரப்படுவன; வாக்கு - வாயால் பேசப்படுவன; கைகள் - கைகளால் பற்றப்படுவன; கால்கள் - கால்களால் நடக்கப்படுவன இவைகள் யாவும் பிரம்மம்''. ''உள்ளம் - உள்ளத்தால் உணரப்படுவது; அறிவு- அறிவால் (தெரிய) அறியப்படுவது. நான் என்ற உணர்வு; இதயம் - இதயத்தால் ஈர்க்கப்படுவது; ஒளி-ஒளிபெறுவது; இவை யாவும் பிரம்மம். உண்மையில் பார்ப்பதும் பிரம்மம்; கேட்பதும் பிரம்மம்! சுவைப்பதும் பிரம்மம்! சிந்திப்பதும் - அறிவதும் - செயலாற்றுவதும் பிரம்மம்! இதுவே பரமாத்மாவான சிவம்! இதில் தான் நமது உள்ளமும், புலன் பொறிகளும் பஞ்ச பூதங்களும் அடங்கியுள்ளன. இதை அனுபவத்தில் அறிந்து கொண்டவன் எல்லாவற்றையும் அறிந்தவன் ஆகிருன். எல்லாம் பிரம்மமே என்பதை உணர்ந்தவன் ஆகிருன்''.

— (பிரச்சனேபநிடதம்)

ஆன்ம நேய அன்பர்களே!

இவ்வாறு சர்வ அகிலாண்டங்களும், ஐம்பூதங்களும் ஐம் பொறிகளும், அப் பொறிகளால் அனுபவிக்கும் பொருள்களும், அறிவால் அறியும் பொருள்களும் ஆகிய சகலமும் பிரம்மமே சிவமே என்ற நிலேயில் பிரம்மத்தைப்பற்றி நாம் அறிந்து கொள்ளவோ உள்ளத்தில் உணரவோ முடியுமா? ஓ! முடியுமே!

எப்படியெனில், 'நான் அதுவாகவே இருக்கிறேன்.' அதுவாகவே இருந்து உணர்கிறேன்; அதுவாகவே இருந்து அறிகிறேன். அறிவதும் உணர்வதும் ஆன்மாவாகிய நானே. 'அகம் பிரம்ம மாஸ்மி'

ஏதோ; எல்லேயற்ற பெருவெளி - ஏகசிவம் - என்றமெய்ப் பொருள் எங்கேயோ இருப்பதாக எண்ணுதே, அன்ப! அது

உன் உள்ளும் – புறமும், மேலும் - கீழும், முன்னும்-பின்னும், எங்கும் நிறைந்து இருக்கிறது. 'ஏதோ! அகண்டாகாரப் பெருவெளி - ஏகசிவம் - என்ற மெய்ப்பொருள் ஒன்று உள்-ளது' என்பதை மட்டும் நீ தெரிந்து கொண்டாய். அது, பரோட்சஞானம். ஆனால் 'அதுவே நான்' என்பதை அறிகிற-தில்லை. அதுவே நான் என அனுபவத்தில் அறிந்து கொள்-வதே அபரோட்ச ஞானம்

'அதுவே நான்' என்பதை (தத்துவமெல்லாம் கடந்த நிலையில்) தத்துவமசி - அது நீ ஆகிறாய் - எனும் உபதேச மகா வாக்கியமாக வேத உபநிஷத் உணர்த்துகின்றன. நான் அதுவாய் காண்பனவெல்லாம், குருநாதர் அருளிய ஞான உபதேசக் கருத்தை உய்த்துணர வேண்டும்.

> "எல்லையற்ற பெருவெளியாம் பிரம்மம் நம் (உலக) ஞானத்துக்கு அப்பாற்பட்டது, என்பதை உணர்ந்-தவனே ஞானி" - கேனோ உபநிடதம் -

'தானே தானாய்த் தன் மயமாய் இலங்கும் பிரம்மம் ஆகிய சிவம்தானே' என்பதைத்தான், சற்குருநாதர் அருளிய மகா வாக்கிய உபதேசம் - சகஸ்ரார உபதேச பாவனை உணர்த்துகிறது.

"தானான தன்மயமே யல்லால் ஒன்றைத்
    தலையெடுக்கவொட்டாது தலைப்பட்டாங்கே
போனாலும் கற்பூர தீபம் போலப்
    போயொளிப்பது அல்லாது புலம் வேறின்றாம்
ஞான காரத்தினொடு, ஞேயமற்ற
    ஞாதுருவும் நழுவாமல் நழுவி நிற்கும்

ஆனாலும் அதன் பெருமை எவர்க்கார் சொல்வார்
    'அது ஆனால் அது ஆவர்' அதுவே சொல்லும்"

"அது என்ருல் எது? என என்று அடுக்கும் சங்கை
ஆதலினுல் அது என்பததுவும் விட்டு
மது உண்ட வண்டது போல்"

- (தாயுமானவர்)

அன்பே! மின் மினிப் பூச்சி, தன்னுள் இருந்து வரும் ஒளியைத் தானே காண முடிவதில்லை. எனினும் தன் இன மின் மினியைப் பார்த்து அறிந்து கொள்கிறது தானே. அது போலவேதான், தன் (உன்) உண்மை சொரூபத்தை குரு பகவான் உணர்த்துகிருர்.

"எட்டுதற்கரிய சற்குரு அருளால் இயம்பும் ஓர்
மொழியினைப் பெற்றே
நிஷ்டை சாதித்தே சகல - கேவலங்கள் நீங்கிடில்
பிறப்பிறப்பறுமே".

– (நிஷ்டானுபூதி)

இரு விழிகள் உலகறிந்தும் தன்னை அறியாது. விழிகள் தன்னை அறிய, ஓர் கண்ணுடி தேவைப்படுகிறது. அதுபோல, உன்னை நீ அறிய ஒரு ஞானகுரு தேவைப்படுகிருர்.

"சரியையின் தொழிலினுலும் சற்கிரியையினும் யோகம்
புரிதரும் முயற்சியாலும் பொருந்தொணு தென்பர்
மேலோர்
உரிய சற்குரு உரைக்கும் ஒரு மொழி உண்மையாலே
அரியமெய் ஞானவீடு இங்கு அடைவது திண்ண-
மாகும்."

— (நிஷ்டானுபூதி)

பிரம்மமாம் தனைமறந்த பேதமையான அஞ்ஞானத்தை அறவே ஒழித்து, உணர்வில் பிரம்ம - சிவமயமாகஇருப்பாயாக.

''நித்திய சிவம் தானுகி நிற்பது ஞான நிஷ்டை''

''உலகுக்கும் உடலுக்கும் நாமரூபமான மனிதர்களாக இருப்போம் - உள்ளத்தில், உணர்வில் ஏக அகண்ட சிவமாக இருப்போம்.''

''நுண்ணிய அறிவாராய்ச்சியாலும் நூல்கள் உணர்த்தும் (புத்தக) ஞானத்தாலும் பிரம்மத்தை-சிவ சொரூபத்தை தெரிந்து கொள்ள முடியாது.'' (முண்டகோபநிஷத்)

ஏனென்றுல் சாஸ்திரங்களெல்லாம் வரைபடங்கள் (பிளான்) மாதிரியாகும். வரைபடங்களையே பார்த்துக் கொண்டிருந்தால் (சாதனையாகிய) வீடு கட்டுவது எப்போது?

நான் அதுவாகவே இருக்கிறேன்; நீ அதுவாகவே இருக்கிருய்;- தத்துவமசி என்கிறது வேதம். எனவே, எதிரிட்டு அறிவதெல்லாம் அனுத்துமவஸ்துக்கள்; ஆத்மா (நான்) அல்ல. இந்த உண்மையை நன்குணர்ந்து, எதிரிட்டு அறிய முற்படாது; தானுன தன்மயமாய் உன்னை நீ அறிந்து அதன் மயமாகி நிற்பாயாக.

''அகம்பிரம்மம் பிரம்மம் அகம், அகம் எல்லாம் என்று
அனவரதம் ஆதரவாய்ப் பழக்கப்பட்ட
தகும் பிரம்ம பாவனையின் நிதித்யாசத்தால்
தங்கு மனே விகற்பமெல்லாம் தவிர்ந்தபின்பு
அகம்பிரம்ம வாக்கியத்தின் லட்சியார்த்த
அனுபூதி அடைந்து அந்தமயமே ஆகிச்
சகம் பரம் நான் என்று அணுவும் நினையாவண்ணம்
சந்ததமும் சலியாமல் சாந்தி ஆவாய்'' (ரிபுகீதை)

இவ்வித பூரணத்துவமான சாந்தி நிலையடைய 'வேதாந்த ஞானுமிர்தம்' எனும் அடுத்த கட்டுரையை ஆராய்வோம். குருவருள் துணை செய்க.

வேதாந்த ஞானமிர்தம்.

"அகத்தூகு அணுஅணுவாய் அண்டமெல்லாம் தானய்
மகத்தாகி நின்றனை நீ வாழி பராபரமே."

– (தாயுமானவர்)

அறிவிற் சிறந்த ஆன்மநேயப் பெரியோர்களே!

நமக்குப் புலனாவதும் அறியக்கூடியதும் பஞ்சபூதங்களே ஆகும்.

மண்-நீர்-நெருப்பு-காற்று-வெளி அல்லது ஆகாசம் என்பதே ஐம்பூதங்கள் ஆகும். இவை போன்றவைகளெல்லாம் உயிரற்ற சடப் பொருள்களே ஆகும். இவற்றின் உண்மை வடிவம் யாது?

உலகிலுள்ள எல்லா சடப் பொருள்களுமே அணுக்களால் ஆகியவை. அணுக்களுக்குள் என்ன இருக்கிறது? மின்சக்தி. அந்த அணுக்கள் எதனுல் ஆக்கப்படுகின்றன? மின்சக்தியால். எனவே, மின்சக்திதான் உலகிலுள்ள எல்லாப் பொருள்களின் வடிவத்திலும் காட்சியளிக்கிறதென்று தெரிகிறது. அந்த மின்-சக்தி அசையும் பொருளா? அசையாப் பொருளா? அது அசையாப் பொருளாக இருந்தால், இந்த உலகம் தோன்றி இருக்கமாட்டாது.

மின்சக்தியின் இயக்கத்தால் அணுக்களும், அணுக்-களின் சேர்க்கையால் உலகத்துப் பொருள்களும் உருவாகி இருக்கின்றன. ஆகையால், மின்சக்தி ஓர் அசையும் பொருள் என்பதில் சந்தேகம் இல்லை. மின்சக்தி அசையும் பொருளாக இருப்பதால், அதற்கு அடிப்படையாக - நிலைக்களமாக - ஓர் 'அசையாப் பொருள்' இருக்கவேண்டுமல்லவா?

அந்த அசையாப் பொருள் எது? அதுதான் பிரம்மம் எனப்படும் இறைவன். இருவேறு நிலைகளில் விளங்கும்

ஒரே பொருள் இறைவனே. நம்மைப் பொறுத்தவரையில் உலகம் என்பது நமது உள்ளத்தில்தான் உணரப்படுகிறது. அதனாலேதான்;

உலகம் நமக்கு வெளியே இல்லை. அது நம் உள்ளத்தி-லேயே இருக்கிறது. உலகமே நம் உள்ளத்தில் இருக்கும் பொழுது. அதற்கு நிலைக்களமாக விளங்கும் பிரம்மமும், நம் உள்ளத்தில்தானே இருக்கவேண்டும்? உள்ளமோ ஆன்மாவையே தனக்குச் சான்றாகக் கொண்டுள்ளது. எனவே உலகத்துக்கும் ஆன்மாவேதான் சான்று; அல்லது நிலைக்களன் என்று சொல்ல வேண்டி இருக்கிறது.

ஆன்மா என்பது என்ன? உள்ளங்களில் பிரதிபலிக்கும் நிலையில் இறைவனுக்கே ஆன்மா என்று பெயர். உலகத்-துக்கு நிலைக்களமாக விளங்கும் நிலையில் அதே, இறை-வனுக்கு பிரம்மம் என்று பெயர். எனவே, 'ஆன்மாவும் - பிரம்மமும் வெவ்வேறு பொருள்கள் அல்ல! வெவ்வேறு நிலை-களில் விளங்கும் ஒரே பொருளின் இரு வேறு பெயர்கள் ஆகும்.

"மனதினால் எண்ணித்தானே வந்ததுஇவ் வுலகம் ஆகும்
நினைந்திடில் அநேகலோகம் நிற்பதுஇவ் வறிவில் அன்றோ?
அனைத்தையும் கடந்து அப்பாலாம் அந்தமற்று அறிவில் தான் என்று
எனைத்தனி விசாரித்திட்டால் ஏகமாய் நிறைந்தோன் நானே".

(கைவல்ய நவநீதம்)

இந்தத் தத்துவத்தை எடுத்துச் சொல்லும் வேத உபநி-டதச் சொற்றொடர்களுக்கு 'மகா வாக்கியங்கள்' என்று பெயர். அவை, 'அகம்பிரம்மாஸ்மி' நான் பிரம்மமாயிருக்-கிறேன் - யஜுர் வேதம் பிரஹதாரண்ய உபநிஷத்.

'தத்துவமசி' அது நீ ஆகிறாய் சாமவேதம் சாந்தோக்ய உபநிஷத்.

'அயமாத்மாபிரம்மம்' இந்த ஆன்மாவே பிரம்மம் – அதர்வண வேதம், மாண்டூக்ய ஷபநிஷத்.

'பிரக்ஞானம்பிரம்மம்' தூய அறிவே பிரம்மம் ரிக் வேதம்– ஐதிரேய ஷபநிஷத் என்பனவே.

மின்சக்தி எதனுல் ஆக்கப்பட்டிருக்கிறது? உலகத்தில் உள்ள பொருள்கள் எல்லாமே மின்சக்தியால் ஆக்கப்பட்டுள்ளன - எனும்போது; அந்தப் பொருள்களில் எதனுலுமே மின்சக்தி ஆக்கப்பட்டிருப்பதாகச் சொல்ல முடியாது. அப்படிச் சொன்னுல், அது 'பஞ்சானது நூலால் ஆக்கப் பட்டுள்ளது' எனக் கூறுவது மாதிரி பேதமைப் பேச்சாக முடியும். ஆகவே உலகத்துப் பொருள்கள் எதனுலுமே மின் சக்தி ஆக்கப்படவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

குறிப்பு:- மின்சக்தியை நீரிலிருந்தோ - அணுவிலிருந்தோ உண்டாக்கி வருகிருர்களே? என வினு எழக்கூடும். நுண்ணிய அறிவாம் விஞ்ஞான அறிவைப் பயன்படுத்தி இயல்பாக உள்ள மின் அணுக்களை ஒன்று திரட்டி மின் சக்தியாக மாற்றுகிருர்களே தவிர, மின்சக்திக்கு அடிப்படையான மின் அணுக்களையே உண்டாக்குவதில்லை.

உலகத்துக்கு அப்பாற்பட்ட ஏதோ ஒரு பொருளாலேயே அது ஆக்கப்பட்டுள்ளது, எனும் முடிவிற்கே நாம் வரவேண்டியுள்ளது. உலகத்துக்கு அப்பாற்பட்ட பொருள் எது? அதுவே, 'பிரம்மம்' அல்லது சிவம் எனப்படும் பரம்பொருள் ஆகும். பிரம்மம் ஒன்றைத் தவிர உலகத்துக்கு அப்பாற்பட்ட பொருள் வேறு எதுவும் இல்லை. இறைவன் = சிவம் ஒருவனே உலகத்துக்கு அப்பாற்பட்டது. அதோடு உலகம் முழுதும் ஊடுருவி இலங்கவும் கூடியது.

இறைவன் உலகத்தைம் படைக்கிருன், என்று சொல்லப்படுகிறது; அதைவிட, 'இறைவன் ஒருவனே இந்த உலகமாக விளங்குகிருன்' என்பதே சாலப் பொருந்தும். கடலே அலையாக விளங்குவது போலவும்; இரும்பே கத்தியாக

விளங்குவது போலவும்; பொன்னே நகையாக விளங்குவது போலவும்; பஞ்சே நூலாக விளங்குவது போலவும் இறைவனே இந்த உலகமாக;—அதாவது இந்த உலகத்துப் பொருள்கள் அனைத்துமாக விளங்குகிறான்.

உலகத்துப் பொருள்கள் நாம் பார்க்கும் பாணியிலேயே (கோணத்திலேயே) இருவகையாகக் கருதப்படுகிறது.

1) பொருள்களின் பெயரையும் வடிவத்தையும் - பொருட்டாக எண்ணி நோக்குவது.

2) அந்தப் பெயருக்கும் வடிவத்துக்கும் அடிப்படையான மூலச்சரக்கையே பொருட்டாக எண்ணி நோக்குவது.

முன்னதற்கு (1) **நாமரூபநாட்டம்**; அதாவது 'திருசியம்' என்றும், பின்னதற்கு (2) **அதிஷ்டானநாட்டம்** அதாவது 'திருக்கு' எனவும் பெயர். உதாரணமாக, ஒரு குடத்தைக் காணும் போது குடம் என்ற பெயரையும், பருத்த வயிறு-குறுகிய கழுத்து-வட்டமான வாய் இவற்றாலான அதன் வடிவத்தைக் கருத்தில் கொண்டு நோக்குவது, **நாமரூப நாட்டம்.** குடம் என்ற பெயரையும் அதற்கு உரிய வடிவத்தையும் மறந்துவிட்டு; அதன் மூலச்சரக்கு ஆகிய களிமண்ணை கருத்தில் கொண்டு நோக்குவது, **அதிஷ்டான நாட்டம்;**

"மேவும் மண்ணில் அவ்வியக்தமே வியக்தமாம் விவ-
கரித்திட வேண்டில்
நாவினால் மண்ணைக் குடம் என்பர்; அக்குடம் நசிப்பது
நாவாலே
பாவு நாம ரூபங்களை மறந்து மண், பார்ப்பதே
பரமார்த்தம்
சீவபேத கற்பிதங்களை மறந்து நீ, சின்மயம் ஆவாயே"
(கைவல்ய நவநீதம்)

நாமரூப நாட்டம் உள்ளவரையில் (குழந்தைகள் போன்ற நிலையில்) **அதிஷ்டானநாட்டம்** உண்டாகமாட்டாது. **அதிஷ்-**

டானநாட்டம் வலுப்பெற்று, நாம ரூபம் மறைந்திருக்கும் வேளையில் (அதாவது தந்தை போன்ற நிலையில்) நாமரூப நாட்டம் தலை எடுக்காது.

"மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதல் பூதம்." (திருமூலர்)

"எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"- (தமிழ்மறை)

பாம்பு என்பது பொய்த்தோற்றம்; கயிறுதான் மெய்ப்பொருள். மெய்ப்பொருளை 'அதிட்டானம்' என்ற பெயராலும், பொய்த் தோற்றத்தை 'அத்தியாசம்' என்ற பெயராலும் அழைப்பது, வேதாந்தஞான நூல்களின் மரபு.

மரத்தால் செய்யப்பட்ட உருவம் யானையாகக் காட்சியளிப்பது போல, 'பிரம்மம்' எனும் பரம்பொருளே உலகமாக -பாராதி அண்டங்களாக-காட்சியளிக்கிறது. ஆனல், இது உலகம் என்கிற உணர்வொடு நாம் பார்க்கும் வரையில், அதன் மூலப்பொருளாகிய பிரம்மம் நமக்கு விளங்காது. 'இது பிரம்மம்' என்ற உணர்வொடு பார்க்கத் தொடங்கி விட்டால், அப்புறம் அது உலகமாக நம் அறிவுக்குப்படாது. 'இது உலகம்' என்று நோக்குவது, நாமரூப நாட்டம். இதுவே மரக்கட்டையை யானையாகப்பார்க்கும் குழந்தையின் நோக்கு. 'இது பிரம்மம்' என்று நோக்குவது அதிட்டான நாட்டம். இது யானை உருவத்தை விட்டு மரக்கட்டையைப் பார்க்கும் தந்தையின் நோக்கமாகும்.

நமது புலனறிவானது; பொருள்களின் பெயர்களையும், வடிவங்களையும் மட்டுமே, நமக்குக் காட்டிக் கொடுக்குமே... அல்லாது, அவற்றின் மூலப்பொருளான 'பிரம்மத்தை' நமக்குக்காட்டிக் கொடுக்காது. பிரம்மத்தைகாட்டிக் கொடுப்பது.

பகுத்தறிவுக்கும் மேலான, சுட்டறிவே. அதாவது தன்னிலை அறிவு

நமது நாமரூப நாட்டத்துக்குக் கருவியாக இருப்பது பகுத்தறிவு. பிரம்மம் என்ற கயிற்றை நமக்கு உலகம் எனும் பாம்பாகக் காட்டிக் கொண்டிருப்பது புலன் அறிவு ஆகும். உலகம் என்ற பொய்த் தோற்றத்தைப் போக்கி பிரம்மத்தை நமக்கு உள்ளது உள்ளபடி காட்டிக் கொடுப்பது சுட்டறிவே ஆகும்.

'நான் இந்த உடல் அல்ல', 'மனமும் அல்ல', ஆன்மாவே நான் என்னும் உண்மையை மெய்க்காட்சியின் வாயிலாக அறிவதே 'க்ஷேத்திரஞானம்' அதாவது அறியும் பொருளைப் பற்றிய அறிவு. இதேபோல. இந்த உலகமும் உலகத்துப் பொருள்களும் பிரம்மமேயன்றி வேறு அல்ல என்னும் உண்மையை 'க்ஷேத்திரஞானம்'. அதாவது அறியப்படும் பொருளைப்பற்றிய அறிவதே அறிவு. க்ஷேத்திரத்தையும், க்ஷேத்திரஞ்ஞனைப் பற்றிய அறிவுதான் உண்மையின் ஞானம். இந்த ஞானத்தை நம்வாழ்க்கையில் கடைப்பிடித்து அனுபவத்துக்குக் கொண்டு வருவதே ஞானயோகத்தின் சாரம்.

அதாவது; உலகில் நாம் எந்த சடப்பொருளைக் கண்டாலும், அதை இறைவனின் வடிவம் என்றே எண்ண வேண்டும். நாம் எந்த உயிர்ப்பொருளைக்கண்டாலும், அந்த உயிரின் வடிவத்தின் உள்ளே உறைபவன் இறைவனே என்பதை உண்மையாக உணர வேண்டும். அதே போல, நமக்கு உள்ளேயும், 'நான் நான் என்று அறிவொளி வீசிக் கொண்டிருக்கும் ஆன்மா அந்த இறைவனே' என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

சுருங்கச்சொன்னால் ; இந்த உலகத்தில், இறைவனைத் தவிர இரண்டாவது பொருள் கிடையாது என்பதை நாம் இடையறாது நினைவு கொண்டு ; எல்லாம் இறைவனே ! நானும் அந்த இறைவனே! என்கிற மெய்யுணர்வில் நாம் உறுதியாக நிலை பெற்று வாழ வேண்டும்.

நாம் இறைவனாக இருந்தால், அந்த இறைவனுக்கு உரிய இயல்புகள் எதுவும் என்னிடத்தில் அமைந்திருக்கவில்லையே ? எனும் சந்தேகம் எழக்கூடும். அப்படி அமைந்திராததற்குக் காரணம்; நம் உடலின்மீதும், மனத்தின் மீதும் நாம் கொண்டுள்ள பற்றுக்களேயாகும்.

இந்த 'உடலே நாம்' என்று எண்ணிக்கொள்வதால், இந்த உடலுக்குரிய குற்றங்குறைகள் எல்லாம் நம்மைப்பற்றிக் கொள்கின்றன. இந்த 'மனமே நாம்' என்று எண்ணிக் கொள்வதால், இந்த மனதுக்குரிய குற்றங்கள் - குறைகள் எல்லாம் நம்மைப்பற்றிக்கொள்கின்றன.

இந்த உடலையும் - மனத்தையும் விட்டு 'பிரம்மமே நான்' என்று இடையறாது உணர்வில் பதித்து வந்தோமானால் அந்த இறைவனுக்கே உரிய மங்களமான இயல்புகள் நம்மிடம் தானாகவே விளங்கத்தொடங்கும் ஆதலால்; அன்பர்களே! இறைவனே நான் எனும்உணர்வொடு நாம் வாழ்க்கையில் கடைப்பிடித்து நடந்து பழகவேண்டும்.

அடுத்து, உலகியல் வாழ்வும் ஒரு கனவுபோன்றதே என்கிறது மாண்டூக்ய உபநிடதம். எப்படியென்றால்; கனவு காலத்தில் - சொப்பனாவஸ்தையில் ஆன்மாவே எல்லா உயிர்ப் பொருள்களாகவும், உயிரற்ற பொருள்களாகவும் காட்சியளிப்பது போல; நனவு காலத்தில் ஜாக்ராவஸ்தையில் - பிரம்மமே எல்லா உயிர் பொருள்களாகவும் காட்சியளிக்கிறது. அந்த பிரம்மம் வேறு ! ஆன்மா வேறு அல்ல !

ஆகையால், 'நமது ஆன்மாவே இவ்வுலகமாகக் காட்சியளிக்கிறது, என்பதை நாம் சந்தேகமின்றி உண்மையாகவும் உறுதியாகவும் உணர வேண்டும். அப்படியென்றால் அதன் பொருள் என்ன? இவ்வுலகிலுள்ள மனிதர்கள் - விலங்குகள்-பறவைகள் — பாம்புகள் — மீன்கள் — கிருமிகள் — மரம் செடி கொடிகள் ஆகிய எல்லா உயிர்ப்பொருள்களின் உள்ளேயும், அவற்றின் உயிர் வடிவத்தில்நின்று, நான் - நான்

என்று அறிவொளி வீசிக்கொண்டிருப்பது என்னுடைய ஆன்மாவே (அதாவது நானே) என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அப்போது உலகிலுள்ள எல்லாப் பிராணிகளின் உடல்களும், என்னுடைய உடல்களேயாகும். எல்லா ஜீவ இராசிகளின் உள்ளங்களும், என்னுடைய உள்ளங்களாகி விடும். பொதுவாக; 'அனைத்தும் நானே' என்ற உணர்வு ஏற்பட்டு விடும்.

'எல்லா உயிர்களும் நானே' என்னும் இந்த அத்வைத உணர்வு வந்து விட்டால்; அப்புறம், எனக்கு நண்பர்கள் உண்டா? பகைவர்கள் உண்டா? வேண்டியவர்கள் உண்டா? வேண்டாதவர்கள் உண்டா? எவரையும் வெற்றி கொள்வது உண்டா? நான் தோல்வியுறுவது உண்டா? பிறர் என்னைப் புகழுவதால் நான் பெருமை அடைவதற்கும், பிறர் என்னை இகழுவதால் சிறுமை அடைவதற்கும் இடம் உண்டா? என்னைக் கண்டு அஞ்சுவதற்கு இடம் உண்டா?

"அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது எனும் பெரிய
ஆப்தர் மொழி ஒன்று கண்டால்,
அறிவாவது ஏது? சில அறியாமை ஏது? இவை
அறிந்தார்கள், அறியார்கள் யார்?
மௌனமொடு இருந்தது யார்? என் போல் உடம்
வாயாய் பிதற்றுமவர் யார்? பெல்லாம்.
மனதெனவும் ஒரு மாயை எங்கே இருந்து வரும்?
வன்மையொடு இரக்கம் எங்கே?
புவனம் படைப்பதென்? கர்த்தவியம் எவ்விடம்
பூத பேதங்கள் எவ்விடம்?
பொய் மெய், இதம் அகிதம் வரும் நன்மை தீமையொடு
பொறை பொறுமையும் எவ்விடம்?
எவர் சிறியர்; எவர் பெரியர்; எவர் உறவர்; எவர்
யாதும் உனையன்றி உண்டோ? பகைஞர்;

இக பரம் இரண்டினிலும் உயிரினுக்கு உயிர் ஆகி
எங்கும் நிறைகின்ற பொருளே!''
—(தாயுமானவர்)

அது மட்டுமா ? கனவில் காணப்படும் மலைகள், ஆறுகள் காட்சியளிப்பது போல, உயிரற்ற சடப்பொருள்களாகவும், நமது ஆன்மாவே காட்சியளிப்பது போல; நனவில், அதாவது விழிப்புக் காலத்தில் இந்த உலகிலே காணப்படும். பனி மலை முதல், பருக்கைக்கல் வரையில், காற்று – நெருப்பு – இடி – மின்னல் – மழை - கடல் – ஆறு – குளம் – உணவு – நஞ்சு - இரும்பு - செம்பு - பொன்- வெள்ளி - ஓடு – உப்புக்கல் முதலிய எல்லாச் சடப் பொருள்களின் வடிவிலும் பிரம்மமே காட்சி அளிக்கிறது அல்லவா? அந்த பிரம்மம் வேறு ! நான் - ஆன்ம சொரூபமான நான் - வேறு இல்லையே !

''ஏக பரிபூர்ணமாம் அறிவே ஆன்மா
இவ்வறிவே விவகார தசையிற்றுனே
ஆக முதலந்த வித உபாதி கட்டும்
அதிஷ்டான வடிவாக அமர்ந்து நிற்கும்
தேக முதல் அனைத்துக்கும் சாட்சியாகும்
திருசியமாம் பொருட் கெல்லாம் அதீதமாகும்
பாகமற விசாரிக்கில் இவ் வான்மாவே
பகுப்பற்ற பரப் பிரம்ம சொரூபமாமே''
— (ரிபு கீதை)

அந்த பிரம்மம் வேறு ! நான் வேறு எனுத போது நான் நெருப்பில் எரிந்தாலென்ன? மழையில் நனைந்தால் என்ன? நான் சோற்றை உண்டாலென்ன? நஞ்சை உண்டாலென்ன? என் மேல் இடி விழுந்தாலென்ன? இவை எதனுலுமே நான் - ஆன்ம சொரூபமான நான் - பாதிக்கப்படுவதற்கு இடமே கிடையாது. ஏனெனில் என்னை இன்புறுத்துவதாக அல்லது துன்புறுத்துவதாகத் தோன்றும் பொருள்கள் எவையுமே எனக்கு வேருனவை அல்லவே?

"இதனை வெட்ட முடியாது; இதனை எரிக்க முடியாது; நனைக்க முடியாது; உலர்த்தவும் முடியாது. இது நித்திய மானது; எங்கும் உள்ளது; நிலையானது; அசைவற்றது எப்பொழுதும் உள்ளது."

— (பகவத்கீதை II — 24)

இத்தகைய உண்மை உணர்வினின்றும், ஒரு விநாடியேனும் நழுவி விடாமல், வாழ்க்கை நடத்துவதே ஞானநிலை அடைந்தவர்களின் இலக்கணமாகும்.

பொதுவாக, உலகத்தில் காணப்படும் நாம - ரூபக் காட்சி-கள் அனைத்தும் பொய்த் தோற்றங்களே! விழித்திருக்கும் போது உண்ட விருந்து; கனவில் நமது பசியை தீர்ப்பதில்லை. அவ்வாறே, நாம் கனவில் உண்ட விருந்து, கண் விழித்த பின் பசியை தீர்ப்பதில்லை. கனவு-நனவு இவ்விரண்டு நிலை-களுமே, அதை அனுபவிக்கும் காலங்களில் மட்டுமே, மெய்-போலத் தோன்றுகின்றன. நனவின் அனுபவகாலத்தில் கனவு பொய்; கனவின் அனுபவகாலத்தில் நனவு பொய். அதாவது, ஒன்றின் அனுபவ காலத்தில் மற்றொன்று பொய்யாகி விடுகிறது' ஆகையால் கனவு - நனவு ஆகிய இரண்டும் பொய்யே. என்கிறது, மாண்டுக்ய உபநிஷத்.

"கனவிடையே நனவில்லை அவ்விரண்டும்
காரணமாம் சுழுத்திதனில் இல்லை அந்த
நனவு, கனா, சுழுத்திகளும் துரியத்தில் இல்லை
நாலுவித அவத்தைகளும் அதீதத்தில்லை
சொனவிதமாம் அவத்தை ஒன்றும் இல்லாததாலும்
சுத்தமதாம் சின்மாத்ர சொரூபம் ஒன்றே
அனவரதம் அழியாமல் இருப்பதாலும்
அத்துவித ஏக சிவ சொரூபமே நான்"

- (ரிபுகீதை)

உயரிய ஆத்மீக ஞான நிலை எய்துவதற்கு ஒரே ஒரு சுலபவழி என்னவெனில்; நாம் எத்தவொரு சங்கதியையும்

முடிவுவரை ஆராயாமல், முன்கூட்டியே ஒரு முடிவுக்கு வந்து விடும் பழக்கம் உடையவர்களாக இருக்கிறோம். ஏனென்றால்; நம்முடைய விருப்பு - வெறுப்புகளே அதற்குக் காரணமாகும். ராகத்துவேஷமாகிய விருப்பு - வெறுப்புக்கள் நம் பகுத்தறிவை மறைத்து மாசு படுத்துகின்றன. அவைகள், நம் பகுத்தறிவின் வளர்ச்சியைத் தடை செய்கின்றன. பகுத்தறிவை வளர்த்துக் கொண்டாலொழிய ஆணவமலம் எனும் நமது அடிப்படை அறியாமையைப் போக்கிக் கொள்ள முடியாது. அதாவது இந்த மனிதப் பிறவியால் நாம் அடைய வேண்டிய பயனை அடைய முடியாது.

ஆகையால்; நமது விருப்பு - வெறுப்புக்களைப் போக்கிக் கொள்வதே ஞான யோகத்தில் நாம் பயில வேண்டிய முதல் பயிற்சி. நம்மைச் சுற்றி எது நடந்தாலும், அதை விருப்பு - வெறுப்பின்றி நோக்கும் ஆற்றலை நாம் முயன்று வளர்த்துக் கொள்ள வேண்டும். அதை வளர்த்துக்கொண்டு விட்டால், உலகின் நிகழ்ச்சிகள் எதனாலும் நாம் பாதிக்கப்படாமல் வாழ இயலும். விருப்பு - வெறுப்புக்கள் இல்லாத உள்ளத்தில் கோபம் பிறக்காது! பொறாமை பொங்காது! பேராசை எழாது! செருக்கு இருக்காது! கண்மூடித்தனம் காணப்படமாட்டாது.

அந்த விருப்பு - வெறுப்பற்ற உள்ளம், எத்தகைய உணர்ச்சிகளாலும் கொந்தளிப்பு அடையமாட்டாது. அது எப்போதும் அமைதியாக இருக்கும்! தெளிவாக இருக்கும்! ஆற்றல் படைத்ததாகவும் இருக்கும். அத்தகைய உள்ளத்தில் தான் பிரம்மமும் ஆன்ம வடிவத்தில் காட்சியளிக்கும்.

அந்த ஆன்மீகக் காட்சியை எவன் காண்கிறானோ அவனிடத்தில் பிரம்ம சாட்சாத்காரமும், இறைவனின் - - மங்களமான இயல்புகளாகிய எல்லாம், தாமாகவே விளங்கத் தொடங்குகின்றன. சுருங்கச் சொன்னால்; அவன் தானே பிரம்ம சொரூபமாகி விடுகிறான். இவ்வித பிரம்ம சாட்சாத்-

கார விதேகமுத்தன் அல்லது சீவன் முத்தத் தன்மையான உயரிய நிலை எய்துவதற்கு ஓர் சுலபமான மார்க்கம் இருக்கிறது. அதுதான்;

இந்த உலகனைத்தையும் - தேகாதி பிரபஞ்சங்கள் அனைத்தையும் ஒரு கனவுக் காட்சியாகப் பார்ப்பது. அப்படிப் பார்த்துப் பழகிய சாதகனுக்கு, உலகும் - உலகில் காணப்படும் அனைத்தும் - நாம, ரூபதிரிசியத் தோற்றங்கள் அனைத்தும் வெறும் பொய்த் தோற்றங்களாகப் புலப்படும்.

உலகக் காட்சிகள் அனைத்தும் வெறும் பொய்த் தோற்றங்கள் என்பதை நன்ருகப் புரிந்து கொண்டே, அவற்றின் தன்மையறிந்து அவற்றில் நாம் மகிழ்வோடு வாழ முடியும்.

"பொய் உலகைப் பொய்யுடலைப் பொய் உறவைப்
பொய் எனவே
மெய்ய! நினை மெய்யெனவே மெய்யுடனே
கான்பேனே"

- (தாயுமானவர்)

உலகக் காட்சிகளைக் கனவாகக் காணும் பயிற்சியில், நாம் தேர்ச்சி பெற்றுவிட்டோமா; இல்லையா? என்பதை அறிந்து கொள்வதற்கு ஓர் எளிய வழி உள்ளது. சோதித்துப் பாருங்கள்.

நாம்; கனவு காணும் போது, அந்தக் கனவு காலத்திலேயே 'இது கனவு எனும் உணர்வு' நமக்கு உண்டாக வேண்டும். அப்படிப்பட்ட உணர்வு உண்டாகி விட்டால் அதற்க்கப்புறம் உலகக் காட்சிகள் நமக்கு மெய்க்காட்சிகளாகத் தோன்றமாட்டா! நாம் மெய்யுணர்வு-ஆத்ம ஞானம் அடைந்துவிட்டோம் என்பதற்கு அடையாளமாகும்.

ஆதலால், ஆன்மநேய சகோதரர்களே! நாம் மெய்யுணர்வு பெற்று ஆத்ம ஞானியாகி சீவன் முத்தத் தன்மை அடையும் வரை, யோக - ஞான சாதனைகள் செய்து வருவீர்களாக. யோக - ஞான சாதனைகளின் வழிமுறைகளைப் பற்றி அடுத்த கட்டுரை வழி காட்டியாக அமைந்துள்ளது. அதை ஆராயலாம்.

யோகமும் - ஞானமும்!. 3

எட்டு உறுப்புக்கள் சேர்ந்து இயங்குவது அஷ்டாங்க யோகம். இது யோகமுறைகள் பலவற்றில் ஒன்ருகும். பதஞ்சலி முனிவர் தனது யோக சூத்திரத்திலும் எட்டு அங்கங்கள் கொண்ட அஷ்டாங்க யோக முறையை அருளியுள்ளார். அதன்சாரம் வருமாறு. யோகம் என்பதற்கு ஒன்றுதல் எனப்பொருளாகும்.

1. இயமம் :- தூய்மை அல்லது பரிசுத்தம். உள்ளும்-புறமும் ஒரு படித்தாய், பனிக்கட்டி போன்று வெண்மை-யாகவும், தூய்மையாகவும், குளிர்ச்சியாகவும் இருத்தலாகும். இடம் சுத்தம் – உடல் சுத்தம் - உடை சுத்தம் - உள்ளம் சுத்தம் ஆக, தூய்மையாக - உண்மையாக - வாய்மையாக இருத்த-லாகும்.

2. நியமம் :- எந்தவொரு காரியத்தையும் - செயலையும் முன் பின் முரணுகச் செய்யாமல், முறைப்படுத்தி கிரமமாகச் செய்து முடித்தலாகும்.

''செயல்களின் திறமையே யோகம்''- கீதை

நாம் சாப்பிடும் போது; இலையில் போட்ட சாதத்தில் முதலில் பருப்பு இட்டு பிசைந்து உண்டபின், வரிசைக்கிரம-மாக முறையே; குழம்பு - ரசம் - காய்கறி - பாயாசம் - மோர்-நீர் ஆகியவற்றை முறைப்படி உண்டு முடித்துக் கை கழுவு-கிறோம். அப்படியல்லாமல்; முறைதவறி முன்னுக்குப்பின்ணுக, முதலில் மோர்விட்டு உண்டு, ரசம் குழம்பு கூட்டி தலைகீழ்-படுத்தி உண்பதில்லை. மேலும், பருப்பு ஒன்றை மட்டுமே போட்டு பூரா சாதத்தையும் பிசைந்து சாப்பிடுவதும், குழம்பை விட்டே முழுசாதத்தையும் விழுங்குவதும் முறை-யல்ல! அப்படி சாப்பிடுவதும் சரியல்ல! நாகரீகமும் அல்ல! நல்லதுமல்ல! அதுபோலவே;

நமது வேதாந்த ஞான சாஸ்திரங்களில், பிரமச்சாரியம்-கிருகஸ்தம் - வானப்பிரஸ்தம் – சந்நியாசம் எனும் ஆசிரமங்களையும்; சரியை - கிரியை - யோகம் - ஞானம் எனும் வழிபடு மார்க்கங்களையும், வரிசைக்கிரமப்படி முறையாக, நமது ஆயுள் காலம் முடிவதற்குள் செய்து முடிக்க வேண்டும். தவறினுல் விட்ட குறையைப் பூர்த்தி செய்ய மீண்டும் பிறவி எடுக்கநேரிடும் தற்காலத்தில்; பிரம்மச்சாரியம், பரமாச்சிரியமாகவும் கிரகஸ்தம், கிர காச்சாரமாகவும்; வானப்பிரஸ்தாசிரமம், வானத்துக்கே போய்விடவும்; சந்நியாசம், தலைகீழாகவும் இருப்பினும், தனிமனிதன் ஓரளவு ஆசிரம தர்மங்களைப் பின்பற்றி நடந்து பூர்ணத்துவமானமுத்தி பெறமுடியும். ஆயுள் முழுதும் பிரமச்சாரியாகவோ அல்லது கிரகஸ்தனுகவோ இருந்துவிடக் கூடாது. கிரகஸ்தாசிரமத்துக்குப்பின், முறைப்படி வானப்பிரஸ்தசந்யாச ஆசிரமத்தையும் கடைப்பிடிது, பின்பற்றி நடக்க வேண்டும். ஆ! சிரமம் என்று, ஆசிரமதர்மங்களை விட்டு விடலாகாது. இவ்வித ஆசிரம முறை இக்காலத்தில் நடை முறையில் இல்லாவிடினும், சாதாரணமாக நாம் எல்லோரும் பின்பற்றி காலத்துக்குத் தக்கபடி நடந்து முத்திநெறிநாடலாம்.

25 வயது வரை பிரம்மச்சாரிய ஆசிரம விதிப்படி (தற்கால) கல்வி கற்றும், 25 வயதுக்கு மேல் 60 வயது வரை கிருகஸ்தாசிரமமாகிய இல்லறமாம் நல்லற வாழ்வு நடத்தியும்; 60 வயதுக்கு மேல் வானப்பிரஸ்தாசிரமப்படி வனம் போய் தவம் புரியப் போகாவிடினும் (அப்படிப் போவதும் தற்காலம் சாத்தியமில்லை) நாட்டிலிருந்தே, அதுவும் வீட்டிலிருந்தே; குடும்பப் பொறுப்புகளிலிருந்து விலகியும், கடைமைகளை முடித்துக் கைவிட்டும், கர்மங்களை ஒழித்தும் அகத்துறவு' அடைந்து. யோக சாதனையால் 'ஞானநிஷ்டாபரன்' ஆகித் தவவாழ்வில் ஈடுபட்டும்; 70 வயதுக்கு மேல் சந்யாச ஆசிரமம் அடைந்து, ஆத்ம ஞானியாகி பிரம்மவித்து-பிரம்மவரன் எனும் சீவன்முத்தன் ஆகி, முடிவில் பிறவிப் பயனுகிய

இனிப் பிறவா விதேகமுத்தி யை அடையமுடியும். அடைந்தும் விடலாம்.

ஆயுள் காலம் வரையிலும் கிருகஸ்தனுகவே இருந்து, உலக விவகார பந்தங்களில் உழன்று கொண்டிருக்கக் கூடாது. நமது வேதங்கள் அப்படி விதிக்கவில்லை. நமது ஆயுள் காலத்தை-வயதைப்-பகுத்து, ஆசிரம விதிகளை வகுத்து நியமித்துள்ளதை கவனியுங்கள்.

இது மாதிரியே சரியை–கிரியை-யோகம் எனும் சோபான வழிபடு மார்க்கங்களில்; ஆயுள் பூராவும் சரியை மார்க்கத்திலேயே தங்கிவிடக் கூடாது. சரியையைவிட்டு மேலேறி, கிரியை மார்க்கத்தில் வந்து அதையும் கொஞ்சம் அனுசரித்து. அதன்பின் யோகம் எனும் படியேறி குண்டலினி யோக சாதனை புரிந்து - தவம் செய்து - ஞான நிலை அடையவேண்டும். முடிவில் ஞானம் எனும் மேல்நிலையடைந்து ஞான யோகியாகி பிரம்மவரியான், பிரம்மவரிட்டன் எனும் முடிவான சீவன்முத்தன் நிலையெய்த வேண்டும்.

காலமெல்லாம் சரியை - கிரியை எனும் கீழ் தளங்களிலேயே நின்று கொண்டு காலத்தை வீணுக்கிவிடக் கூடாது. ஜென்ம சாபல்யம் பெற வாலிப வயது முதற்கொண்டே யோக - ஞான மார்க்கங்களாகிய மேல்தள வேதாந்த ஞான நிலைகளை எட்டிப்பிடித்து சாதனை புரிந்து முத்தியெனும் பூர்ணத்துவம் பெற முயல வேண்டும். இம்மாதிரி முறைப்படி நிவர்த்தி மார்க்கத்தில் நடப்பதே நியமம் எனப்படும்.

3. ஆசனம் :- இருப்பாக ஓர் நிலையில் அசைவற்று நெடுநேரம் அமர்ந்திருத்தலாகும். யோக நூல்களில் முக்கியமாக ஐந்து ஆசனங்கள் விதிக்கப்பட்டுள்ளது. அவைகள் முறையே, சுவஸ்திகாசனம் - வீராசனம் - குக்குடாசனம் - பத்மாசனம் – கோமுகாசனம் என்பதாகும். மற்ற ஆசனங்கள் யோகப்பயிற்சிக்கு ஏற்றதல்ல.

“பத்திரம் வீரம் குக்குடம் அரிய பங்கயம் கோமுகம்
ஐந்தும்
வித்தகமான அங்க ஆசனமாம்” — (நிஷ்டானுபூதி)

இவைதவிர, அவரவர்களுக்கு நிஷ்டையில் அமர துன்பமில்லாதிருக்கும் இருப்பு, சுகாசனம் ஆகும். இவ்வித ஆசனங்களால் மூலாதார உஷ்ணம் முதலான சில உடல் பிணிகள் கட்டுப்படுத்தப்படும்.

“செவ்வேயுடலுங் கழுத்தும் சிரமுற - வெவ்வே
ஆசனத்திருந்தவர்க்கும் கைவந்து; வாதமுதல்
நோய் நலியா மதியுடையோர் ஆசனம் என்பதது”
— அமிர்தசாரம்

4. பிராணாயாமம் :- மூச்சு தறிகெட்டோடி வீணாதலைத் தடுத்துச் சமமாக இயக்குதல். யோகப்பயிற்சி செய்பவர்கள் கேவலம் உலக விடய சித்துக்களைக் கருதாமல், முத்தி நெறியான பூர்ணத்துவத்தை நாடும் ஞான யோகியாதல் வேண்டும். அவ்விதம் இல்லாமல், சுவாசன பந்தனம் செய்து மூச்சை அடக்குவதே முடிவான நிலை என்று நினைக்கக் கூடாது. இவைகளை வழிபடு மார்க்கம் என்று கருதாது, தேகாத்ம புத்தியுடன் பிராணாயாமம் செய்கிறவர்களுக்கு இனிப்பிறவா முத்தி சித்திக்காது. மேலும் பிராணாயாமமே ஞானம் என்று கருதி, சுவாசத்தைப் பிடித்து நிறுத்தி பல துன்பங்களுக்கு ஆளாகி மோசம் போகிறார்கள். சுவாசமானது சூக்கும சரீரத்தின் ஓர் அங்கமாக இருந்துகொண்டிருப்பதால், யோக முறையில் மனம் அடங்க முறைப்படி பிராணாயாமம் செய்யலாம். ஆனால் அதுவே பொருள் என்று மயங்காது, ஆத்ம ஞானத்தைத் தேடி மேல்நிலைகளான பிரத்யாகார - தாரணை - தியானம் - சமாதி நிலைகளை நாடி, அவைகளை கைப்பற்ற விடாது சாதனை செய்தல் வேண்டும்.

பூரகம் — ரேசகம் — கும்பகங்களையும்; பிங்கலை — இடகலை சுழுமுனைகளிலே அப்யாசம் செய்து, வீணாக காலத்தையும்,

உடலையும் நாசமாக்கலாகாது. மூச்சைப்பிடித்து நிறுத்தி, லயம் வாங்குவது அபாயமாகும். பதஞ்சலி முனிவரும் **யோகாஸ் சித்த விருத்தி நிரோத"** யோகம் என்பது எண்ண அலைகளின் தொகுப்பான **மனதைக் கட்டுப்படுத்தும் உபாய-மாகும்''** என முதல் சூத்திரத்திலேயே அறிவுறுத்தியுள்ளார். ஆதலால், அஷ்டாங்க யோகத்தில் **பிராணயாமம் ஓர் அங்க**-மாகுமே தவிர முடிவானதல்ல.

''கருமயோகம் எட்டாகும் அதனுல் சித்தி கைகூடும்,
பெருகுமதனுல் பெருமையுண்டாம், பெரிய தடிப்புண்-டாகும்
அருமையாகக் கருதவொண்ணு! அதனுல் மனமும் நிலையாதல்
உரிய ஞான யோகத்தால் உழலும் மனமும்
நிலைத்திடுமே — (நிஷ்டானுபூதி)

5. பிரத்தியாகாரம் :- மனம் வெளிவிவகாரங்களில் ஓடி அலையாமல் ஒருநிலைப்படுத்தி அகமுகப் படுத்துவதாகும். **குண்டலினி யோகப்பயிற்சியினுல்** மனம் அகமுகமாகிவிடும். இது ராஜயோக முறைகளில் மிகச் சுலபமான முறையாகும். இல்லறவாசிகளான நமக்கு மிகவும் நன்மை தரக்கூடியது. மனம் சாந்தியடைய இந்த யோகமே மிகச் சிறந்த வழி-யாகும். வெளி உலக விவகாரங்களில் அலைந்து கொண்டி-ருக்கும் எண்ண அலைகளை ஒருமுகமாக்கி அகமுகப்படுத்து-வதே **பிரத்தியாகாரம்** எனப்படும்.

6. தாரனை :- மனதைக் காற்றில்லா இடத்திலுள்ள தீபம் போல அசைவற - முயற்சியின்றியே நிறுத்துதல்.

7. தியானம் :- மனம் அமைதியடையும் பொழுது தன்னை-அறிவு சொரூபமான ஆன்மாவான தன்னை-தன்னுள் தேடி அடைதல். தியானமானது; **புலத்தியானம் - புத்தித் தியானம் - போதத்தியானம் - பரத்தியானம்** என நான்கு வகைப் படும்.

I. புலத்தியானம் ; புலன்களால் தெரிந்த விடயங்களை உணர்தல், புலனறிவினால் தெரியலான திரிசியப் பொருள்களின் நிலையாமையை, உணர்வினால் சிந்தித்துச் சிந்தித்து நித்யா நித்யவஸ்து விவேகமடைதல், **புலத்தியானமாகும்.**

II. புத்தித்தியானம் ; மனிதனால் அறிந்த ஞானேந்திரிய கர்மேந்திரிய முதலான கருவிகளின் செயல் தன்மையின் உணர்ச்சிகளை உணர்வினால் அறிந்து, கருவி காரணாதிகள் நானல்ல எனும் தியானமும், **'ஆன்மாவே நான்'** என அறிதலும் புத்தித்தியானமாகும்.

III **போதத்தியானம்** ; ஆத்மஞான போதத்தால் தன்னை அறிந்து தன்மயமாகும் ஆத்மத்தியானமே **போதத்தியானமாகும்.**

IV **பரத்தியானம்** ; யோகத்தால் ஆன்மாவான தன்னை அறிந்து ஞானத்தால் 'அதுவே' யாதல் தியானரகிதமாகும். அதாவது அகண்டாகார அனுசந்தானமே பரத்தியானமாகும்.

"பொருளின்மை காண்டல் புலத்தியானம் உள்ள-பொருள்
உணர்தல் புத்தித்தியானம், பொருளறிந்த - போத
மறிதல் போதத்தியானம்! போதமே - ஆதல் பரத்
தியானமாம்" - (அமிர்தசாரம்)

8. சமாதி :- மனதுக்கும், சீவனுக்கும் மேலானதும், எல்லாமானதும் - அல்லதுமானதும், அவஸ்தாரகிதமானதும், சுகதுக்கமற்றதும், பேரறிவு மயமானதுமான பரம்பொருள் மயமாகி விடுதல். அதாவது இறைவன் வேறு, தான் வேறு எனாதபடி இறைவனுடன் இணைந்து விடுதல். இறைவனாக ஜ்வலித்தல்.

"ஆங்ஙனம் குறித்த அம்முதற் பொருளொடு
தான் பிறனாகத் தகையது **சமாதி**"

- (குணங்குடிமஸ்தான்)

அஷ்டாங்க யோகத்தின் முடிவான சமாதி நிலையை அனுபவத்தில் அடைய குண்டலினி யோகப் பயிற்சி ஒரு சிறந்த சாதனையாகும். இப்பயிற்சியின் முதிர்வே முடிவான ஞானநிலை யாகும். ஆகவே. குண்டலினி யோகப்பயிற்சியை ஒரு குறிப்பிட்ட காலம் வரை இடைவிடாமல் அப்பியாசம் செய்து மன ஒருமைப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

முதலில் குண்டலினி யோகப் பயிற்சி யின் சாதனையால், ஆக்ஞை எனும் புருவ மத்தியில் கண்ணாகிய சக்தியும், கருத்தாகிய உணர்வும் - கண்ணும் கருத்தும் ஒன்றி நின்று, சாம்பவி முத்திரை நாட்டம் வைத்து, யாதொரு எண்ணமும் இல்லாத நின்மல நிஷ்டையில் ஐந்து நிமிடங்கள் முதல் படிப்படியாக அதிகமாக்கிக்கொண்டு வந்து, முடிவில் முப்பது நிமிடங்கள் வரை: தவம் எனும் நிஷ்டை யிலிருந்து பழக்கப் படுத்திக் கொள்ள வேண்டும். இப்பயிற்சி நான்கு அல்லது ஐந்து வருடங்கள் நீடித்தாலும் பரவாயில்லை. இவ்வித, தவம் ஆகிய குண்டலினியோகப் பயிற்சியை செய்து முடித்தேயாக வேண்டும். இப்பயிற்சியின் சாதனை மூலமாக அரைமணி அல்லது ஒருமணி நேரமாவது நினைவொன்றும் நினையாதநிஷ்டையில் அமரவேண்டும்.

அடுத்து, உச்சியில் சகஸ்ரார நாட்டம் அதாவது கேசரி முத்திரை நிலையில் சிவோகம் பாவனையில் ஒன்றி லயம் ஆகி நிஷ்டை - சவிகற்பசமாதி நிலையில் நிலைத்திருக்க வேண்டும். குருபகவான் அருளிய மகாவாக்ய ஓர் மொழி உபதேசமாகிய 'தத்துவமசி' வாக்கியக் கருப்பொருள்-இலட்சியார்த்தம்-சிவோகம் என்னும் பாவனையாகும். இதுவே. 'அகண்டாகாரவிருத்தி' எனப்படும்.

"ஏக சிவம் நான் என்னல் அகண்ட விருத்தி"
- (ரிபுகீதை)

"சிந்தனை புறம் செலா 'சிவோகம்' பாவனை
சந்தத மூனுற்றிடில் சமாதி வந்துறும்"
- (சிவஞான வள்ளலார்)

மெய்ஞ்ஞான அன்பர்களே!

பாவனை என்பது மனதால் எண்ணப்படுவதல்ல! ஏனெனில், நினைப்பற்ற நிஷ்டை தன்னிலேயே மனம் நசித்து விடுகிறதே? அப்புறம், மனம் எங்கிருந்து வரும்? எனவே, பாவனை என்பது வேறு; நினைப்பு என்பது வேறு அல்லவா? ஆதலால், பாவனைக்கும் - நினைப்புக்குமுள்ள வித்தியாசத்தை நீங்கள் நன்ருகத் தெரிந்து கொள்வது அவசியமாகும்.

மனதால் எண்ணப்படுவது தான் நினைப்பு; நினைப்பு எழும்போது, அதற்குஎதிர்மறையான மறப்பும் உண்டாகுகிறது. இவ்வித மறப்பும் - நினைப்புமே, பந்தம்; அதாவது, 'பிறப்பு - இறப்பு' க்கு ஏதுவாகிறது.

"இறப்பும் பிறப்பும் பொருந்த - எனக்கு
எவ்வண்ணம் வந்ததென்று எண்ணியான் பார்க்கில்
மறப்பும் - நினைப்புமாய் நின்ற - வஞ்ச
மாயா மனத்தால் வளர்ந்தது தோழி"
– (தாயுமானவர்)

தேகாத்ம புத்தியற்ற தூய அறிவினுல் உந்தப்படும் தூய உணர்வுதான் 'பாவனை' எனப்படும். பாவனையானது தைலதாரை போல, விசாதீய விருத்தி இன்றி, சதா உணர்வில் ஊறி உதித்துக் கொண்டேயிருக்கும் இயல்புடையது. அது நினைக்கப்படுவதுமல்ல! மறக்கப்படுவதுமல்ல! நிலைக்கப் படுவது. நினையாமல் நினைப்பது; தூய உணர்வில் ஊறிக் கொண்டே இருப்பதுதான் 'பாவனை' ஆகும்.

எனவே, இவ்வித அகண்டாகார 'பாவனையை அணு' குவது எப்படி? கவனிப்பீர்களாக! சூரியன் அகண்டாகார-மான அண்ட வெளியில் ஒளி மயமாகப் பிரகாசித்துக் கொண்டுள்ளது.

சூரியனை உற்று நோக்குங்கள். அது வட்ட வடிவமான கோளமாக - உருண்டையாக ஒளிர்கிறது. சூரியனைச் சுற்றியுள்ள வட்டம் பானுரேகை அல்லது பரிதிவட்டம் எனப்படும். அது ஒரு கோடு அல்ல! பூமத்திய ரேகையைப் போல கற்பனையாகக் கூறப்படும் தோற்றம் ஆகும். அந்தப் பரிதி வட்டத்தினுள் சூரியன் பிரகாசிக்கிறது. அந்த ஒளிக்கதிர், மெல்ல மெல்ல வெளியே பரவிப் பரவி அண்டவெளி எங்கும் பிரகாசித்துக் கொண்டு, ஊடுருவிப் பாய்ந்து செல்கிறது. அதாவது, எல்லையற்ற பெருவெளியில் இடையின்றிப் பிரகாசித்துக் கொண்டே தொடர்ந்து பிரயாணம் செய்து கொண்டிருக்கிறது. அது போலவே;

நமது உடம்பில், அறிவு சொரூபமான ஆன்மா நிறைந்து நின்று வியாபகமாய், பரிதி வட்ட சூரியனைப் போல பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. நமது ஆன்மா அறிவு சொரூபமானதால் ஆகாயம் போல் வெளிமயமானது. சிதாகாசசொரூபம். அது நமது உடம்பின்; உள்ளும் - புறமும், மேலும் - கீழும், முன்னும் - பின்னும், சர்வ இடங்களிலும், ஊடுருவி வியாபித்து நிறைந்துள்ளது.

உடல் பரிதி வட்டம் போன்றது; அதில் நமது ஆன்மா சூரியனைப் போல பிரகாசித்துக் கொண்டுள்ளது. கற்பனையான அந்தப் பரிதிக்கோட்டை எடுத்துவிட்டால், ஆன்மா; உணர்வெளி சிதாகாசமானதால், அதன் ஒளிக்கதிர் மெல்ல-மெல்ல வெளியே எங்கும் பரவி வியாபித்து, எல்லையற்ற அகண்டாகார வெட்டவெளியில் கலந்த 'ஆன்மாகார உணர் வெளி' எல்லையற்ற பெருவெளியில். போக்கு வரவற்ற பொருளாய் போய்க்கொண்டே இருக்கிறது. அதாவது பேரறிவு மயமான எல்லையற்ற பெருவெளியுடன் ஐக்கிய பாவனை ஏற்படுத்திக் கொள்கிறது.

அந்த அகண்டாகார பாவனையில், நித்தியசிவம் தானாகி நிற்கும் நிலையில் மணிக்கணக்காக நிஷ்டையில் நிலைத்திருக்-

கலாம். ஆனால் உடல் தாங்காது; கால்கள் விறுத்து வலி உண்டாகிவிடும். அப்போது உடல் எனும் பரிதிக்கோட்டில் உடலாகிய உபாதிக்குள் ஆன்மா மீண்டுவிடும். அப்போது காலம் மிக - மிகக் குறுகிவிடும். சில நிமிடங்கள் போல காலம் தோன்றுவது, உடல் உணர்வு வந்தவுடன் கவனிக்கும் போது, இரண்டு - மூன்று மணி நேரம் சென்றிருப்பதைக் காணலாம். இது தவத்தில் ஏற்பட்ட சுய அனுபவமாகும். இதுவே, சவிகற்ப சமாதி ஆகும். நீங்களும் இதை அனுபவத்தில் அறிய முடியும். முயற்சி செய்வீர்களாக! வெற்றி நமதே!

இப்போது ஓர் ஐயப்பாடு எழக்கூடும்? சூரியன்தான் ஒளிமயமானது; உள்ளும் - புறமும் பிரகாசிக்கிறது. ஆனால்; ஆன்மா, உடலின் வரம்புக்கப்பால் வெளியே எப்படி பிரகாசிக்க முடியும்? என்று.

ஆத்மீக ஆர்வமுள்ள அன்பர்களே! கவனியுங்கள்.

சூரியன் உலகை ஒளிர்விக்கிறான்! ஆனால் சூரியனை ஒளிர்விப்பது எது? கண்கள். கண்களை ஒளிர்விப்பது மனம். மனதை ஒளிர்விப்பது ஆன்மா. ஆன்மா சுயம் பிரகாசம். ஆன்மா தன்னைத்தானே ஒளிர்வித்துக் கொண்டு, மற்ற எல்லாவற்றையும் - சூரியனையுங் கூட - பிரகாசிப்பிக்கச் செய்கிறது. ('அதிகாலையில் ஆத்ம சிந்தனை' நூலில் 17 ஆம் பக்கம் விபரம் காண்க.)

எனவே, தன்னை அறிந்த சீவன்முத்தர், அதாவது ஆத்ம ஞானி எல்லாம் தற்சொரூபமாகவே அறிகிறான்.

''வாழ்த்துதற்கோ வாயில்லை! வணங்குதற்கோ சிரமில்லை!
சூழ்த்துதற்கோ மலரில்லை! தொழுவதற்கோ கையில்லை!
ஏத்துதற்கோ பா இல்லை! எதிர்ந்ததற்கோர் இறையில்லை!
பார்த்த இடம் தொறும் யானே! எனை யானே பணிகின்றேன்'' — (சிவஞான வள்ளலார்)

ஆகவே, எங்கும் நானே! எல்லாம் நானே! என்றும் நானே! ஏக சிவமும் நானே! நான் இன்றேல் உலகில்லை! நான் இன்றேல் பரமில்லை! எனும் உணர்வு ஏற்பட வேண்டும்.

தன்னை அறிந்த தவ சீலர்களே! எல்லையற்ற பெரு-வெளியின் ஐக்கிய அனுபவம் அடைய வேண்டுமெனில்;

1. அதிகநேரம் இருப்பாக அமரக்கூடிய **சுகாசனம்** ஏதாவது ஒன்றில் மெத்தென்ற துணிவிரிப்பில் ஆசனத்தில் அமரவும்.

2. பைரவி – சாம்பவி - கேசரி, என்கிற முத்திரைகளின் மூலம், மூக்கு நுனி புருவமத்தி – உச்சி ஆகிய இடங்களில் உணர்வை கொண்டு சென்று, கண்ணும் கருத்துமாகக் கவனிக்க வேண்டும்.

3. உச்சிக்கண் எனும் சகஸ்ராரத்தில், **'சிவோகம்'** பாவனையில் சிந்தனை புறம் செலாது அமைதியாக தவம் ஆகிய **'ஞானநிஷ்டை'** யில் அமர்ந்திருக்க வேண்டும்.

4. அந்த சகஸ்ராரத்தில். பானுரேகை எனும் **பரிதி வட்டத்தை** பாவனை பண்ணி, பின்பு பரிதி வட்டத்தை எடுத்துவிடவும். **ஆன்மாவின் உணர்வெளி**; பரிதி வட்டத்தை எடுத்தவுடன். அது அகண்டாகாரமான எல்லையற்ற பெரு வெளியில் பரவும்.

5. அந்த மோன – சிதாகாச - அமைதி வெளியில்; **உணர்வெளியான** ஆன்மா, உடல் எனும் உபாதியை விட்டு விரிவடைந்து எல்லையற்ற பெருவெளியில் ஊடுருவிப்-பரவுவதை ஞானக் கண்ணால் உணர்ந்து அனுபவத்தில் அறிவீர்களாக. அவ்விதமான அகண்டாகார சொரூபமான அனுசந்தான அற்புத அத்வைத நிலையில் ஆனந்தமாக லயம் ஆகி நிற்பீர்களாக. அதாவது எல்லையற்ற பெரு-வெளியின் மயமாகி விடுவீர்களாக.

எவ்வளவு நேரம், இவ்வித அகண்டாகாரவிருத்தியாகிய, சவிகற்ப சமாதி நிலையில் அமர்ந்திருக்க முடியுமோ, அவ்வளவு நேரம் அமர்ந்திருந்து, காலில் வலி தோன்றியவுடன் நிஷ்டை கலைந்து எழுந்திருக்க வேண்டும். இது ஒரு அரிய ஆத்ம-ஞான ஆனந்த அனுபவமாகும். முயற்சி செய்து அப்பியாச அனுபவ சாதனைகள் மூலமாக 'அகண்டாகார விருத்தி' நிலை-மையை அடைவீர்களாக!

இவையெல்லாம் ஆத்மீக சாதனைகளில் உயர்ந்த நிலை-களாகும். யோகம் எனும் படிகடந்து ஞானநிலையடைந்த தவ அனுபவங்களாகும். மற்றும், குண்டலினி யோகப் பயிற்சி சாதனை செய்யும் போது ஏற்படும் நிகழ்வுகள் - காட்சித் தோற்றங்கள் எல்லாம், எதிரிட்டறியும் புறச் செயல்களாகும். மேலும், யோகம் என்பது எண்ண அலைகள் மோதுவதைத் தடுப்பதற்காகச் செய்யும் சாதனைகளில் ஒன்ருகும். அதுவே முடிவானதல்ல! நமது உயர்ந்த இலட்சியம் இனிப் பிறவா நெறியான 'பூர்ணத்துவ நிலை' அடைய வேண்டும். அதை அடைய இடைவிடாது சாதனை செய்து வெற்றி பெற வேண்டும்.

அந்த உன்னத இலட்சியத்தைக் குறிக்கோளாகக் கொண்டே நமது வாழ்க்கைப் பாதையை அமைத்துக் கொண்டு, அதை நோக்கியே, நமது எண்ணம் - சொல் - செயல் ஆகிய எல்லாம் இயங்கி வரவேண்டும். திருசியப் பொருள்களையெல்லாம் 'திருக் காகக் காணும் காட்சியே சகச சமாதி நிலையாகும்.

''பார்க்கும் பொருள் எல்லாம் பரம்பொருள் மயமே!
பார்க்கும் பொருள் எல்லாம் பரமானு சேர்க்கையே!
பார்க்கும் பொருள் எல்லாம் பார்ப்பவன் அறிவிலே!
பார்க்கப் பார்க்கப் பரம்பொருளே பார்ப்பவனுகிருன்''

நிஷ்டை புரிவதும் ஒரு தொழிலேயாகும். ஆனுல், அது உடம்பை வளர்க்கும் உலக விவகாரத் தொழில் அல்ல! பரம்

பொருளோடு, ஆன்மாவான நம்மைப் பிணைக்கும் ஆத்ம ஞானத் தொழிலாகும். பூர்ணத்துவ நெறியில் செலுத்தும் பிறவிப்பயனுன மேலான தொழிலாகும் ஆதலால் பூர்ணத்-துவமான முத்திபெற முயற்சி செய்வீர்களாக. வெற்றி நமதே! குருவருள் துணை செய்க!! ஓம்.

★

'உடலே நான்' எனும் தேக அபிமானத்துடன் உலகியல் வாழ்வில் யாதொரு குறிக்கோளுமின்றி உழன்று கொண்டிக்கும் மக்களுக்கு உடல் நீ யல்ல! உணர்வு சொரூபமான அறிவே நீ! என விளக்கிக் காட்டும் 'ஜடபரதோபாக்யானம்' எனும் சடபரதரின் ஞானம் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாக விளங்கி வருகிறது. ஆகவே, அவரது ஞான மொழியினை இந் நூலுக்குத் துணை இணைப்பாக சேர்த்துள்ளோம். படித்துப் பயன் பெறு-வீர்களாக.

துணை இணைப்பு

ஜடபரதோபாக்யானம்

ஞானயோகி இரத்தினசற்குரு

சாந்திநிலையம் அலங்கியம்

சுவாயம்புவ மனுவின் பிள்ளையான பிரியவிரதன் சந்ததியில் வந்த நாபி என்பவருக்கு மேருதேவி என்பவளிடத்தில் ரிஷபர் என்பவர் பிறந்தார். அந்த ரிஷபருடைய மூத்தமகன் பரதர். ரிஷபருக்குப்பின் ராஜ்யபட்டாபிஷேகம் பூண்ட பரதமன்னனால் ஆட்சி செய்யப்பட்ட இந்த தேசமே 'பரதவர்ஷம்' என, வழங்கலாயிற்று.

நீதி முறைப்படி நாட்டை ஆட்சி புரிந்த பரதன், தன் சுமதி எனும் புதல்வனுக்கு ஆட்சியை அளித்துவிட்டு, ஆத்ம ஞானியாகித் துறவு பூண்டு, சாளக்கிர க்ஷேத்திரம் சென்று, ஞானயோகியாகி தவம் செய்யலாயினர்.

எங்கும் வியாபித்து நிறைந்து நின்ற பகவத்சொரூபமே. தனது இதயகமலத்துள்ளும் நிறைந்து ஆத்மசொரூபமாக இலங்குகின்றது எனும் உண்மையை அனுபவ பூர்வமாக உணர்ந்து பற்றில்லாது தவம் செய்து வந்தார்.

ஓர்நாள் மகாநதியில் நீராடிவரும் சமயத்தில் அங்கே நிறை கர்ப்பமுள்ள மான் ஒன்று தன்னந்தனியாக நீர் குடிக்க வந்தது. மான், நீர் அருந்திக் கொண்டிருக்கும் போது, அதிபயங்கரமான சிங்கத்தின் கர்ஜனைக்குரல் கேட்டது. அக் கர்ஜனையைக் கேட்டவுடனே, மான் மிகவும் பயந்து, திகைத்துப் பரபரப்புடன் நதியின் உயர்ந்த கரையில் தாவிக் குதிக்கும்போது, அதன் கர்ப்பமானது பிரசவமாகி, நீரில் மான்குட்டி விழுந்து மிதந்தது.

பரதமுனிவர். அந்த மான்குட்டியைக் கண்டு இரக்கம் கொண்டு, அதைத் தன் கையில் எடுத்துக் கொண்டார். அதேசமயம். தாய்மான், கர்ப்பம் விழுந்த அதிர்ச்சியினுலும், சிங்கபயத்தாலும், தாவி உயரக் குதித்ததாலும் கீழே வீழ்ந்து உயிர்விட்டது. தாய்மான் இறந்ததால், அனுதை ஆகிவிட்ட அந்த மான்குட்டியின் மீது இரக்கங் கொண்டு, பரதரிஷி அதை எடுத்துக் கொண்டு தமது ஆசிரமம் சேர்ந்தார். அந்த மான்குட்டியை வெகு அன்புடன் வளர்த்து வந்தார். அதுவும் வளர்ந்தது.

ஆசிரமத்தின் அருகாமையிலிருந்த, இளம்புற்களை மேய்ந்து கொண்டும், புலி முதலான மிருகங்களைக் கண்டால் ஆசிரமத்திற்கு ஓடிவந்து ஒளிந்து கொண்டும், காலையில் புறப்பட்டு மேய்ந்துவிட்டு, மாலையில் ஆசிரமத்திற்குத் திரும்பிவந்து தங்கிக் கொண்டும் இருந்தது. இவ்விதமாக அந்தமான் ஓடிவிளையாடுவதைக் கண்ட பரதயோகியின் மனம், அதனிடம் பற்றும் பாசமும் கொள்ளலாயிற்று. ராச்சியம், மக்கள், குடும்பம் முதலான பந்தபாசங்களை விட்டு, யோகநிஷ்டையிலிருந்த அந்த முனிவர், மான்மீது மிகவும் அபிமானங்கொண்டிருந்தார்.

அதைச் சிறிதுநேரம் காணுவிட்டாலும் கூட அவர் மனம் பரிதவித்தது. ''ஐயோ! நம் மான்குட்டியைக் காண வில்லையே! அதைப் புலி, செந்நாய் அறைந்து தின்றதோ? இன்னமும் வரவில்லையே? என் செய்வேன்'' என, வருந்து-வார் ''அந்தமான் விளையாடிய இடங்களில், அதன் குளம்பு பட்ட சுவட்டைக்கண்டு மகிழ்ச்சியடைவேனே? அப்படிப் பட்ட எனது மான்குட்டி எங்கே போயிற்றே? தெரிய வில்லையே? அது என் அருகே வந்து, தன் கொம்பினுல் என் உடம்பை உறசி சுகம் உண்டாக்குமோ? அது நலமுடன் திரும்பிவந்து சேர்ந்து இன்பம் உண்டாக்குமோ?

இங்கு வராமல் துன்பத்தை உண்டாக்குமோ? என்ன செய்வேன்? இப்போதுதான் முளைத்த தனது சிறுபற்களால் கடித்த தருப்பைப் புற்களும், நாணல்களும் மொட்டையாகத் தோன்றுகின்றனவே? இவ்வாறு அது மீண்டும் வந்து மேயக் காண்பேனோ?'' என்று புலம்பி வருந்துவதும்; அது வந்ததும் பெருமகிழ்ச்சியடைவதுமாக இருந்தார்.

இவ்வாறு அந்த மான்குட்டியின்மீது பற்றுக்கொண்டு இருந்ததால், ராஜ்ய அரச போகங்களை எல்லாம் துறந்த பரதயோகிக்கு சமாதி நிஷ்டைகலையலாயிற்று. இந்நிலையில், அவருக்கு மரணகாலமும் நெருங்கியது. அப்போது, தந்தையை அன்பு மகன் நோக்குவதுபோல அந்த மான் குட்டியானது கண்களில் கண்ணீர் ததும்ப முனிவரைப் பார்த்துக் கொண்டிருந்தது. அதைப்போலவே, பிரியமான மகனைத்தகப்பன் பார்ப்பதுபோல, பரதமுனிவரும் கண்ணீர் ததும்ப மான்குட்டியைப் பார்த்துக்கொண்டே அதே நினைவுடன் பிராணனை விட்டார். அதனால்;

மறுபிறவியில், அவர் கங்கைக்கரையில் ஒரு மானகப் பிறந்தார். எனினும், தனது பூர்வ சென்ம தவயோகச் சிறப்பினால் பூர்வ ஜென்ம ஞானமுடையவராக இருந்தார். அதனால் அந்த மான் இனத்தை விட்டுப் பிரிந்து முன்பிருந்த சாலிக்கிராம க்ஷேத்திரத்தை அடைந்து அங்குள்ள உலர்ந்த புற்களையும் சருகுகளையும் புசித்து மானகப் பிறக்கக் காரண-மான கர்மங்களைக் கழித்துவிட்டு அங்கேயே மரணமடைந்-தார். பிற்பாடு;

அந்த ஊரிலேயே நல்ல ஒழுக்கமும், யோக நிஷ்டையும் மிகுந்த உத்தமமான உயர் குலத்திலே, பூர்வ ஜென்ம உணர்வோடு பிறந்தார். பூர்வ ஞானம் தோன்றியதால் விட்டகுறை தொட்டகுறையாக முன்போலவே சகல சாஸ்-திரங்களின் உண்மை உணர்ந்தவராய், எல்லாவிதமான ஞானத்திலும் தேர்ச்சி பெற்ற துறவியாய் விளங்கினர்.

'ஆத்மசொரூபத்தை'ப் பிரகிருதிக்கு வேருகவும், தேவாதி எழுவகைத் தோற்ற சகல தேகங்களிலுமுள்ள ஆத்ம சொரூபம் யாவும், தம்மைவிட பேதமில்லாமல் விலட்சணமான ஞானு காரமுள்ளவையாகப் பாவித்து. ஞானுனுபவியாக விளங்கினர். வேதாந்த ஞான நூல்களைக் கற்றுத் தேர்ந்த ஆத்மஞானி-யாக அவர் இருந்ததால் எந்தவொரு கர்மத்தையும் செய்ய வில்லை. **'அதிவர்ணுச்சிரமி'** என்ற சீவன் முத்தராக இலங்-கினர், மேலும்;

அழுக்கு நிறைந்த உடம்போடும், அழுக்கேறிய கந்தை ஆடைகளோடும், ஊத்தைப்பல்லோடும் கண்டவர்கள் அருவருத்து அவமதிக்கும்படி நடந்துவந்தார்.

"உலகோர் செய்யும் புகழ்ச்சியான, வெகுமதிப்பானது, யோகசம்பத்துக்கு மிகுந்த கேட்டை விளைவிக்கும். உலகோர் செய்யும் அவமதிப்போ, கர்வத்தையும் அகங்-காரத்தையும் போக்குவதால், யோகசித்தியைத் தருவதாகும். ஆகையால், யோகியானவன், யாவரும் தன்னிடம் சேராமல், தன்னை அவமானம் செய்யும்படிச் சடன் (மூடன்) போல காட்டிப் பெரியோருடைய-ஞானிகளுடைய-ஒழுக்கத்திற்குப் பழுதுவராமல் காத்து நடக்க வேண்டும்". என்ற வேத வாக்கியங்களை நினைத்து அவர், வித்துவானுக இருந்தும், ஆத்ம ஞானியாக இருந்தும் மூடனைப் போலவும் பித்தனைப் போலவும் திரிந்து கொண்டிருந்தார். இப்படியாக இருந்ததால் அவருக்குச் ஜடபரதர் என்ற பெயர் வழங்கலாயிற்று. புழுத்துக் கெட்டுப்போன உளுந்து, கோதுமை, அரிசி முதலியவற்ருல் செய்த அப்பங்களையோ, கீரையையோ, காட்டுக்கிழங்கு களையோ ஏதாவது ஒன்றை அவர் தின்று பிராணதாரணை செய்து வந்தார். இந்நிலையில் அவர் தந்தை இறந்தார். அவ-ருடைய தம்பியரும், அண்ணன்மார்களும் பந்துக்களும், அவருக்கு அற்ப ஆகாரம் கொடுத்து, அவரைக் கொண்டு வயல்வேலைகளையும், மற்ற வேலைகளையும் செய்வித்து

வந்தார்கள். அவர் அந்த வேலைகளையும் கூடச் செம்மையாகச் செய்யாமல் மூடனைப்போல செய்து வந்தார்.

அவர், அற்ப ஆகாரத்தைப் புசித்து வந்தாலும், அவர் உடல் நன்ருகக் கொழுத்துப் பருத்தும், கண்கள் இரண்டும் வித்தியாசமின்றி சமமாக ஒளிவீசி விளங்க தோற்றத்தில் மாற்றமின்றி இருந்து வந்தார். அவரது உறவினரும் ஊராரும், அவரிடம் வேலைவாங்கிக்கொண்டு, கூலி கொடாமல், வயிற்றுச் சோற்று ஆளாக வைத்திருந்தார்கள். அவர்கள் எந்தவேலை செய்யச் சொன்னுலும் தட்டாமல் ஜடபரதர் செய்து வந்தார்.

குளிக்காமல், சடைமுடியோடும், அழுக்கு ஆடைகள் அணிந்த குறிகளோடும். பைத்தியகாரன் போலவே சடபரதர் திரிந்து வந்தார். இந்நிலையில்;

ஒருநாள், அவ்வூர் அரசசேவகன் ஒருவன், அரசனது சிவிகையைச் சுமக்க, சடபரதரைப்பிடித்து போய், தக்க சிவிகையாளாக நினைத்து அமிஞ்சி பிடித்துப் போட்டான். சவ்வீர அரசன், ஆத்மஞான ஆர்வத்தால் "துக்கமயமான சம்சாரத்தில் எது உயர்ந்தது?" என்பதைத் தெரிந்து கொள்ள, இட்சிமதி நதி தீரத்தில் இருந்த கபில மகா முனிவரைக் காண்பதற்கு விரும்பினுன். எனவே அரசன் பயணப்பட்டான். அந்த அரசனுடைய பல்லக்குப் போயிகளாக - அமிஞ்சி (மாற்ருளாக) பிடித்துப் போட்டிருந்த ஆட்களிலே சடபரதரும் சேர்ந்திருந்தார்.

சகல ஞானமும் உணர்ந்தவராக அவர் இருந்தாலுங்கூட, தமது பிராரப்த கர்மங்களை அனுபவித்துத் தொலைக்க பல்லக்கைச் சுமந்து சென்று கொண்டிருந்தார். அப்படிப் போகும் போது மாரளவு தூரம் பிராணி யொன்றுமில்லாதபடி தரையைப் பார்த்துக் கொண்டே நிதானமாகவும் மெதுவாகவும் அவர் நடந்துசென்ருர். மற்றவர்கள் துரிதமாக நடந்தனர்.

அதனுல், பல்லக்கின் வேகம் குறைந்ததால், சிவிகையில் இருந்த அரசன், ''சரியாக நடங்கள்''. என்று சிவிகையாரை அதட்டினுன். அப்படி அதட்டியும் பல்லக்கின்வேகம் குறைந்-ததால், அரசன் மிகுந்த கோபத்துடன், ''சிவிகையாரே! என் பேச்சையும் மதியாது ஏனிப்படி நடக்கிறீர்கள்''. என்று பல முறைகள் கூவினுன். அதற்கு சிவிகையாட்கள், ''மகாராஜா! எங்களால் யாதொருகுற்றமுமில்லே; இவன் தான் இப்படி நடக்கிருன்''. என்று, சடபரதரைக் காட்டிக் குற்றம் சாட்டி-ஞர்கள். அதைக் கேட்ட அரசன்; ''அடா! என் பல்லக்கைச் சிறிது தூரம் தானே நீ சுமந்து இருக்கிருய் இதனுலே களேத்து விடாய்த்து விட்டாயோ? மேலும், நீ வருத்தத்தைச் சகிக்க மாட்டாதவனே? கண்கூடாக நீ பருத்தவனுகவே காணப்-படுகிருயே? சுமக்க உனக்கென்னகேடு?'' என, சீற்றமுடன் கேட்டான்.

அதற்கு சடபரதர், "அரசே! நான் பருத்தவனுமல்ல! உனது பல்லக்கைச் சுமக்குபவனும் அல்ல! அதற்காக நான் வருந்தவும் இல்லே! ஆன்ம சொரூபமான நான் ஆயாசமும் அடையவில்லே''என்ருர். அதைக்கேட்ட அரசன், அவரது கருத்தைப் புரிந்து கொள்ளாமல், "பார்வையில் நீ, பரு-மனுகத் தானே தோன்றுகிருய்? இப்போது உனது தோளில் என் பல்லக்கு இருக்கிறது. சுமை சுமந்தால் எந்தப் பிராணிக்-கும் களேப்பு ஏற்படும் என்பது நிச்சயமாக இருக்க, நீ ஏன் பொய் சொல்லுகிருய் ?'' என்று, கேட்டான். அதற்கு;

ஜடபரதஞானி ''அரசே! நீ என்னவோ கண்கூடாகக் (பிரத்யக்ஷமாகக்) கண்டேன் என்று சொன்னுயே, அந்த வஸ்துவை, முன்னே நான் அறியச் சொல்வாயாக! அது பல-முள்ளது என்பதையும், இல்லாதது என்பதையும் பற்றிப் பிறகு பேசலாம். மேலும் என்னுலே சிவிகை சுமக்கப்பட்டது! அது இப்போதும் என் மேல் இருக்கிறது என்று சொன்னு-

யல்லவா? இது சுத்தப் பொய்! அதைக் குறித்து நான் சொல்வதைக் கேட்பாயாக! நிலத்திலே இரண்டு பாதங்கள் இருக்கின்றன. அவற்றின் மேல் கணைக் கால்கள் இருக்கின்றன. அவற்றிலே தொடைகள் இரண்டும் நிற்கின்றன! அவற்றை ஆதாரமாகப் பற்றி நிற்கிறது இடை: வயிறு, மார்பு, கைகள், தோள்கள். இவையனைத்தும் வயிற்றின் மேல் இருக்கின்றன. அந்தத் தோளின் மீது படிந்திருப்பது சிவிகை. இப்படியிருக்க ஆன்மாவாகிய - எனக்கு ஏது பாரம்? அந்த சிவிகையிலே, 'நீ' என்று உன்னால் அழைக்கப்பட்ட - நினைக்கப்பட்ட - தேகம் இருக்கிறது! அந்த தேகத்தில் நீ இருக்கிறாய்; அது போலவே இந்த தேகத்தில் நான் இருக்கிறேன். அரசே! நீயும் நானும் தேகங்களாய் மாறி, நிற்கிற மற்றவரும், பிருதிவி முதலிய பஞ்ச பூதங்களாலே சுமக்கப்படுகிறோம். இந்த பஞ்சபூத வர்க்கமும் குணங்களின் வெள்ளத்திலே வீழ்ந்து, அதன் வசத்தால் நடத்தல் முதலிய செயல்களைச் செய்கின்றன. சத்துவம் முதலான குணங்களும் கருமங்களுக்கு வசப்பட்டிருக்கின்றன. அந்தக் கருமங்கள் அவித்தையினாலே சம்பாதிக்கப்பட்டிருக்கின்றன. அந்த அவித்தை சகல பிராணிகளிலும் இருக்கின்றது. ஆத்மாவோ, சுத்தமாய் நாசமில்லாததாய், பசி தாகம் முதலியவைகள் இல்லாததாய், சத்துவாதி குணரகிதமாய், குணமயமான பிரகிருதியைக் காட்டிலும் வேறானதாக இருக்கிறது. அது சகல பிராணிகளிலும் தேகம் போல அநேக அம்சமாய் இராமல் ஒரே அம்சமாக இருக்கிறது. அது வளர்வதுமில்லை; தேய்வதுமில்லை. இப்படியாக ஆன்மாவுக்கு விருத்தியோ, தேய்வோ இல்லாமலிருக்க 'நான் பருத்திருக்கிறேன்' என்று, எந்த யுக்தியினாலே சொன்னாய்? அன்றியும்,

பூமி, பாதம், கணைக்கால், தொடை, இடை முதலான உறுப்புகளின் அடுக்கின் மேலுள்ள தோளில் இருக்கும் பல்லக்கினால் எனக்குப் பாரம் உண்டென்றால், அந்த பாரம் உனக்கும் சமமாக இருக்கவேண்டும். மேலும் சகலமான

பேருக்கும் இந்தப் பல்லக்கின் பாரம் மட்டுமல்ல; காடு, மலை, வீடு முதலானவற்றைப் பற்றிய பாரமும் உண்டென்றே சொல்லவேண்டும். இப்படியன்றி ஆன்மாவானது பிராகிருதங்களான அவயவங்களைவிட வேறு என்பது சித்தப்படும்போது, 'நான் பாரத்தைச் சுமக்கிறேன்' என்பது ஏது? இந்தப் பல்லக்கு எந்தப் பொருளால் ஆனதோ அந்தப் பொருளால் ஆனது தான் இந்த உடம்புமாகும். இதில் தான், எனக்கும் மற்றவர்க்கும் 'மமத்துவம்'—எனது, என்ற அபிமானம் உள்ளது." என்று சொல்லிவிட்டுப் பல்லக்கைச் சுமந்து சென்றுர்.

இதைக் கேட்டவுடனே அரசன் திடுக்கிட்டு, சிவிகையிலிருந்து கீழே இறங்கி, சடபரதயோகியாரின் திருவடிகளைப் பிடித்துக்கொண்டு "ஐயனே! அடியேன் அறியாமல் செய்த குற்றத்தை மன்னித்தருளல் வேண்டும். தேவரீர் சடனைப்போல ரூபம் தரித்துள்ளீர்! தேவரீர் யார் என்றே தெரியவில்லை. என்ன காரணத்தினுல், என்ன பயனைக் கருதி இங்கே எழுந்தருளினீர்கள், என்பதை எனக்குச் சொல்ல வேண்டும்" என்ருன்.

"அரசே! நீ யார், என்று என்னைக் கேட்டாயல்லவா? அதற்கு நான் இன்னுர் என்று விடையளிக்க முடியவில்லையே! எப்பயனைக்கருதி எதனுல் இங்கே வந்தாய் என்பதற்கு பதில் சொல்ல வேண்டுவதில்லை. எங்கும் வருவதற்குப் பயன் அனுபவமே. இந்தச்சுக துக்க அனுபவங்கள் புண்ணிய பாவங்களால் உண்டானவைகளாய் இடத்தையும் காலத்தையும் பற்றியிருப்பதால், ஜீவன்கள் தனது கர்மானுபவத்திற்கு உரிய தேசகாலங்களிலே தேகாதிகளைப் பெற்று வருகின்றனர்." என்றுரைத்தார் சடபரதர்.

யோகியாரே! சகலகாரியங்களுக்கும், தருமா தருமங்களே காரணமென்பதும், சுகதுக்க அனுபவத்திற்காகத் தேகம் பிரவேசிப்பது என்பதும் சரிதான். ஆனுல், 'நான்

இன்னர் என்று ஆன்மாவைக் குறித்துச் சொல்லக்கூடாது என்று கூறினீர்களே?' அதை அறிய விரும்புகிறேன். மற்றும், ஆத்மா என்பது இல்லாதபொருள்; ஆகையால் அப்படிச் சொல்லக் கூடாது என்ருல், ஆத்மா இருக்கிற பொருளே-யல்லாமல் இல்லாததன்றே? இந்த 'நான்' எனும் சொல் ஆத்மாவின்மேல் பிரயோகிப்பது குற்றம் அல்லவே? இப்படி-யிருக்க 'நான் இன்னன் என்று சொல்ல முடியாது' என்று நீங்கள் எப்படிச் சொன்னீர்கள்." என்று, அரசன் கேட்டான். அதற்கு சடபரதர்;

"அரசே! ஆன்மாவைக் குறித்து நான் எனும் சொல்லைப் பிரயோகிப்பது குற்றம் அல்ல. அதுவும் சரிதான். ஆனல், நான் இன்னன் என்பதால், ஆன்மாவல்லாத தேகாதிகளிலே ஆத்ம புத்தியும், இப்படிப்பட்ட பிராந்தியைத் தெரிவிக்கும் சொல்லாவதும் ஆகிய குற்றங்கள் உண்டாம்."

"அரசே! 'நான்' என்று, சொல்வது எது? நாக்கும் உதடு-களும், தாழ்களும் தான் 'நான்' என்று சொல்லுகின்றன, என்று நினைக்கிருயே, அவைகள் அனைத்தும் கருவிகளே யல்லாமல், கர்த்தாவான ஆத்மா அன்று. ஆத்மா தேகத்தைக் காட்டிலும் வேருனது. ஞானமே வடிவாகக் கொண்ட நான் எனும் ஆத்ம சொரூபத்தைக் காட்டிலும் வேருன வடிவுள்ள ஆத்ம ஸ்வரூபம் ஒன்று இருக்குமாளுல், என்னை இன்னன் என்று சொல்லலாம். அப்படித் தான் இல்லையே? ஆன்மா நித்தியப் பொருள். உடல் முதலியவைகள் அநித்தியப் பொருள்-கள். ஆகையால் அரசனுகிய நீயும், இந்தச் சிவிகையைச் சுமக்கின்ற நாங்களும் எல்லாமே இருக்கும் பொருளல்ல. எப்படியெனில்;

முன்பு மரமாக இருந்தது வெட்டப்பட்டுக் கட்டை ஆயிற்று. பிறகு அது நீ ஏறியிருக்கிற பல்லக்கு ஆயிற்று. இந்த நிலை-யில் அதற்கு மரம் என்றே, கட்டை என்றே பெயர்களில்லை.

'மகாராசா மரத்தின்மீது ஏறி இருக்கிருர்' என்று இவர்கள் சொல்வார்களா? அல்லது 'கட்டையின் மேல் இருக்கிருர்' என்று தான் சொல்லுவார்களா? 'சிவிகையில் இருக்கிருர்' என்று தானே சொல்லுவார்கள். இதனை ஆராய்ந்தால் சிவிகை என்பது கற்பனையான ஒருவகை ஜோடிப்பேயாகும்; அதாவது கட்டைகள் அடுக்கப்பட்ட ஜோடிப்பு. இந்த ஜோடிப்பைப் பிரித்து விட்டுப் பிறகு பல்லக்கு எங்கே? என்பதைத் தேடிப்பார். அதுபோலவே;

குச்சி, சலாகை முதலியவற்றைப் பிரித்துக் குடையைத் தேடிப்பார். இந்த நியாயத்தாலேயே இன்னுர், நான் இன்னுர், எப்படி என்பது தெரியும். கர்ம வசத்தால் உண்டாகியிருக்கிற தேகங்களிலே, புருடன் என்றும் பெண் என்றும் மாடென்றும் ஆடென்றும், யானை என்றும் குதிரை என்றும், மரம் என்றும், கொடி என்றும், வழங்கப்படுகின்றன.

நீ நான் என்கிற சொற்களின் முக்கியப் பொருளான ஆன்ம சொரூபமானது ஆணுமல்ல! பெண்ணுமல்ல! அலியுமல்ல! தேவனுமல்ல! மனிதனுமல்ல! மிருகமுமல்ல! மரமுமல்ல. இந்த தேவத்துவாதி தர்மங்கள் (உருவங்கள்) எல்லாம் ... கர்மத்தினுல் வந்த சரீரத்தின் ரூபபேதங்களேயாகும்.

அரசே! நீ உலகத்தாருக்கு அரசன்; தகப்பனுக்கு மகன்; பகைவனுக்குப் பகைவன்; மனைவிக்கு மணாளன்; மகனுக்குப் பிதா.இப்படியிருக்க, உன்னை யார்? என்று, நான் சொல்வேன். மேலும், நீ என்ன சிரசா? கழுத்தா? வயிரு? இந்த உடம்புக்கு நீ யார்? உனக்கு இந்த உடல் யாது? இவ்விதமாய்ச் சகல உறுப்புகளுக்கும் வேருக இருக்கிற நீயே நன்றாக ஆலோசித்து - சிந்தித்து - 'நான் யார்' என்று அனுபவத்தில் தெளிந்து கொள். உண்மை இப்படி இருக்க, என்னை நான் இன்னுன் என்று வேறுபடுத்தி எப்படிச் சொல்ல முடியும்." என்று சடபரதர் விளக்கினுர்.

ஆத்ம தத்துவத்தைப் பற்றி சடபரதர் கூறியதும் அரசன் அவரை நோக்கி. "சுவாமி சகல பிராணிகளிலும் பிரகிருதி-

யிலும் வேருய், ஞான சொரூபமாய், மகத்தானதாய் ஒரே விதமான ஆத்ம சொரூபம் உண்டென்றும் கூறினீர்கள். "சிவிகையை நான் சுமக்கவில்லை; என்னிடத்தில் சிவிகையு-மில்லை; இந்த உடல் சுமக்கிறது. நம்மைவிட அது வேருனது. திரிகுணங்களின் ஏவலினுல் பஞ்ச பூதங்கள் அசைகின்றன. அந்தக் குணப்பிரவிருத்தியும் கருமத்தினுல் ஏவப்படுகிறது. ஆகையால் அவற்ருல் எனக்கென்ன? என்றும், தாங்கள் இத்-தகைய பரமார்த்தங்களைக் கூறினீர்கள். மகானே! நான், 'இந்த சம்சாரத்தில் எது உயர்ந்தது?' என்பதைத் தெரிந்து கொள்வதற்காகக் கபில மகா முனிவரிடம் போகப் புறப்பட்-டேன். இதனிடையில் அந்தப் பரமார்த்த விஷயத்தைத் தேவரீர் அருளிச் செய்ததால் என் மனம் தங்களையே நாடு-கின்றது. கபிலமுனிவர், உலக அஞ்ஞானத்தைப் போக்கும் பொருட்டு பூமியில் இறங்கிய ஸ்ரீ பகவத் அம்சமானவர். தங்-களையே அந்தக் கபிலராக நான் கருதுகிறேன். ஆகையால் அடியேனுக்கு 'எது உயர்ந்ததோ' அதனை அறிவிக்க வேண்டும்". என்ருன்.

அரசே! இப்போது நீ என்னை உயர்வைப் பற்றிக் கேட்-கிருயா? அல்லது பரமார்த்தத்தைப் பற்றிக் கேட்கிருயா? சிரேயசு (உயர்வு) என்பதும், பரமார்த்தம் என்பதும் ஒன்றல்ல. எந்த மனிதன் தனது இஷ்டதேவதைகளை ஆரா-தித்துப் பணம் முதலிய சம்பத்துகளை இச்சிக்கிருனே, அந்தச் செல்வப்பேறே 'சிரேயசு' எனப்படும். அதுபோலவே, சந்-தானத்தை இச்சிப்பவன் அதை அடைவது சிரேயசாகும். யக்ஞாதி கர்மங்களைப் புரிந்து சுவர்க்காதிகளைப் பெற நினைப்பவனுக்கு அந்த சுவர்க்காதிகளே சிரேயசாகும். எந்த வொரு பயனையும் கருதாமல் யாகாதி கர்மங்களைச் செய்-பவனுக்கு அந்தக் கர்மமே உயர்வாகும். யோக நிஷ்டை-யிலிருந்து ஆத்மத்தியானம் செய்வோருக்கு அதுவே உயர்ந்-தது. அந்த ஆன்மாவுக்கு பரமாத்மாவோடு ஒன்ருகக்கூடுதல்

மேலான சிரேயசாகும். இப்படி ஒன்றுக்கொன்று மேலான ஏழு சிரேயசுகள் முக்கியமானவைகள். இவற்றின் உட்பிரிவு-களான சிரேயசுகளும் உண்டு. இவையெல்லாம் பரமார்த்-தங்களல்ல.

எப்படியெனில், பணமே பரமார்த்தமானால், அதைத் தருமத்திற்காகவும் காமத்திற்காகவும் செலவு செய்-வானல்லவா? அப்படிச் செலவு செய்வதனால் பணம் பர-மார்த்தமாக மாட்டாது, இதனால் சாதிக்கப்படுகின்ற தர்ம காமங்களும் அழியக்கூடியவை. ஆதலால் அவை பரமார்த்-தம் என்று சொல்லப்படமாட்டா. காரியங்களெல்லாம் காரணங்களுக்கும் பரமார்த்தமேயல்லாமல் யாவற்றுக்கும் ஆக மாட்டாது

இராஜ்யம் முதலானவை பரமார்த்தம் என்றால், அவை நிலையானதாகாமையால் அவை பரமார்த்தமாகா.

ரிக் யஜுர், சாமம் என்ற வேதங்களின் விதிப்படி... செய்கின்ற யாக கர்மத்தையே பரமார்த்தம் என்று நீ நினைத்திருந்தாயானால் அதுவுமல்ல. மண் என்ற காரணப்-பொருளினால் உண்டாக்கப்படும் குடம் முதலியவைகளுக்-கான காரியங்கள் எல்லாம் காரணமான மண்ணின் தன்-மையையே அடைந்திருப்பதைப்போல், நாசப்படத்தக்க சமித்து, நெய், தர்ப்பை முதலியவற்றால் செய்யப்படும் யாகாதி கர்மமும் நாசப்படத்தக்கது. ஆகையால் அதுவும் பரமார்த்தமாகாது. பரமார்த்தம் என்பது நாசப்படாததாக ஞானிகளால் அங்கீகரிக்கப்பட்டதேயாகும். யாதொரு பயனை-யும் விரும்பாமல் செய்கின்ற யாகங்கள், மோட்சத்துக்கு (முத்திக்கு) சாதனமானவையேயாகும். ஆகையால் அவை பயனைக் கொடுத்தவுடன் நசிப்பதால் அது பரமார்த்தம் அல்ல. மற்றும்;

ஆத்ம தியானமும்; விசதம் - விசததரம்; பிறவற்றினின்-றும் தெளிவு - நற்றெளிவு என்று, இவ்வகைப்பட்ட பேத

(அவஸ்தா) நிலைகளை அடைதலாலும்; போனதை நினைத்தல், பிரத்யட்சத் தோற்றம் முதலாக க்ஷணந்தோறும் மாறுதலினு-லும் அதுவும் முடிவான பரமார்த்தமன்று.

பரமாத்மாவோடு ஆத்மா ஐக்கியமாகின்ற யோக நிலையே பரமார்த்தம் என்று சிலர் நினைக்கிறார்களல்லவா? அப்படிப்பட்ட யோகமும் பரமார்த்தமல்ல. அந்த யோகம் ஏன் பரமார்த்தமல்ல என்றால், கூடஸ்த பிர்மமென்னும் நினைவும் நழுவவேண்டுமல்லவா?

எனவே, 'நீ, நான்' என்றிரண்டிலாது நிறைந்த பூரண-மாய் எங்கும் நானாகத் தெளிந்த 'ஞானமே' முடிவான பரமார்த்தமாகும். ஆகையால்;

அரசே! நான் முன்பு சொன்னவைகள் யாவும் சிரேயசு கள் என்பதில் ஐயமில்லை. பரமார்த்தம் எது என்று சுருக்க-மாகச் சொல்லுகிறேன், கேள்.

பிரிகிருதிக்கு வேறுபட்டதாகவும், சத்துவாதி குண சம்பந்தமில்லாததாகியும், தேகத்தைப்போல பல பொருளா-யிராமல் ஒரே பொருளாகவும், ஞானத்தால் (பேரறிவால்) எங்கும் வியாபிக்கக்கூடியதாயும், உற்பத்தி விநாச, விருத்தி க்ஷயாதிகள் இல்லாததாயும், பஞ்சபூதங்களில் வியாபகமா-யிருப்பினும் அவற்றின் தன்மைவிராவுதல் இன்றியும்,தேகாதி-களுக்கு அதிபதியாயும் முக்காலங்களுக்கும் அப்பாற்பட்டதா-யும், மேலான ஞானவடிவாகவும், தன்னுடையதும் பிறரதுமான தேகங்களில் இருக்கின்ற அந்த ஆத்ம சொரூபத்தைப்பற்றி எல்லாம் ஒரேவிதம் என்கிற ஞானம் எதுவுண்டோ? அந்த ஞான சொரூபம் தான் பரமார்த்தமாம்.

ஆதலால், தேகவித்யாசத்தால் மாறுபாடாக நினைப்பவர்-கள் யதார்த்தத்தை அறியாதவர்கள். புல்லாங்குழலின் உள்ளே நுழைந்த காற்று ஒன்றாயிருந்தும் அதன் துவார பேதங்களினால் அந்தக்காற்றுக்கு சப்தஸ்வரவகை பேதநாமங்-

கள் ஏற்பட்டதைப் போல ஆத்ம சொரூபம் பேதமில்லாத-தாக இருந்தும், அதற்குப்புறம்பான கர்மபேதத்தால் வந்த சரீர பேதத்தைப்பற்றி எழுவகைத்தோற்ற விவகாரம் உண்டாகிறது. அத்தக்கர்மாவாகிய மறைவு (மாயை) அழிந்-தால், எழுவகைத்தோற்ற பேதங்கள் இல்லவே இல்லை." என்று சடபரதர் உபதேசித்தார்.

அரசனும் நகர் திரும்பி, சடபரதமுனிவரையே குருவாகக் கொண்டார். முடிவில், அரசே! சத்துருக்கள் மித்திரர்கள் என்கிற வித்தியாசமின்றி கர்ம வசத்தால், எங்கும் இருக்கின்ற ஆத்ம சொரூபம் ஒன்றே என்பதை உணர்வாயாக! களங்கமற்ற சுத்தமான ஆகாயம் ஒன்றேதான். ஆயினும் அது உபாதி வசத்தால் கறுப்பு - வெளுப்பு என்று வெவ்வேருகத் தோற்ற-மளிக்கிறது. அதுபோலவே ஒரே விதமான ஆத்ம சொரூபம் அஞ்ஞானிகளுக்கு வெவ்வேருகத் தோற்றமளிக்கிறது.

"எந்தெந்தப் பொருளுண்டோ, அந்தந்தப் பொருள்கள் யாவும் பிரம்ம சொரூபந்தான். (அதற்கு) வேருனதும் மேலான-தும் எதுவுமில்லை. நானும் அதன் சொரூபம்; நீயும் அப்படியே! சகலமும் அப்படித்தான்! அலை திவலை நுரை கடலில் உதித்-தொடுங்குமாறுபோல் எல்லாம் அதனிடத்தே தோன்றி நின்று ஒடுங்கி அதுவேயாகிறது. ஆகையால் எல்லாம் வேறு வேறு என்கின்ற பேத புத்தியாகிய அஞ்ஞானத்தை விட்டுவிடு" என சடபரதர், சவ்வீர அரசனுக்கு உபதேசித்தார். அரசனும் சுத்த ஞானியானுன்.

சடபரத யோகியும் பூர்வ ஜென்ம ஸ்மரணத்தினுல் ஞான யோகமடைந்து, அந்தப் பிறவியிலேயே விதேகமுத்தி அடைந்-தார். நாமும் அத்தகை முத்திப் பேறு பெற முயல்வோமாக.

ஓம். குருவருள் துணை செய்க!

(பி. கு. தழுவல்:- விஷ்ணுபுராணம்)

சிந்திய முத்துக்கள்

மனிதன் தன் அகங்காரத்தினுல் பலவீனமடைகிருன். பகுத்தறிவு தோல்வி அடையும் போது தான் மனிதனுக்கு ஞானம் உண்டாகிறது. சின்னஞ்சிறு எறும்பு தன்னைவிட பெரியதும் கனமானதுமான பொருள்களை எடுத்துச் செல்கிறது. மனிதன் பிறர் உதவியில்லாமல் தன்னை விட கனமான பெரிய பொருள்களை தூக்கிச் செல்லமுடியுமா? முடியாது. காரணம் தானே செய்கிருேம் என்ற அகங்காரமேயாகும். மனிதனைத் தவிர ஏனைய பகுத்தறிவில்லாத ஐந்தறிவு படைத்த பிராணிகள் தங்கள் சுய சக்தியினுல் எந்தக் காரியமும் செய்கின்றன. அவை எந்தப் பிராணிக்கும் உபத்திரமோ, நஷ்டமோ, துன்பமோ உண்டாக்குவதில்லை. ஆனுல் மனிதன் வீடுகட்ட எத்தனை மரங்கள் நசிக்கின்றன எத்தனை பேர் உதவி வேண்டும்? பறவைகளும் மிருகங்களும் கட்டும் கூடுகளும் குகைகளும் கொடுங்காற்றினுலோ, பெரிய மழையிலோ வீழ்வதில்லை. பிறர் உதவியோடும் ஏராளமான பொருட்செலவு செய்து கருங்கல்லில் இஞ்சினியர்கள் போன்ற மேதைகளால் கட்டப்பட்ட வீடுகள் கொடுங்காற்று, பெரிய மழையினுல் இடிகின்றன, நசித்துப் போகின்றன. என்ன காரணம்? தானே செய்கிருேம் என்ற அகங்காரம் மனிதனிடம் இருப்பதே அவனது தோல்விக்குக் காரணம் மனிதனுடைய பகுத்தறிவு தோல்வியடையும் போது தான் மனிதனுக்கு ஞானம் வருகின்றன. மற்றபிராணிகளுக்கு பகுத்தறிவு இல்லாததால் அகங்காரமும் இல்லை. ஆதலால் அவைகள். எதிர்கால விளைவுகளை முன் கூட்டியே அறியும் உணர்வுகள் நிறைந்து உள்ளன. மனிதனுடைய பகுத்தறிவே அவனுடைய அகங்காரத்துக்கும் தோல்விக்கும், பலவீனத்-துக்கும் அகம்பாவத்துக்கும் காரணம்.

—ஸ்ரீ இரத்தின சற்குரு

"பிரம்மத்துக்கு அந்நியமாகக் காணும் பேத புத்தியே அச்சம் தருவது".

—ஸ்ரீ இரத்தின சற்குரு.